விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 04 சனிக்கிழமை (20.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275

### உதவிகள் கிடைப்பது உங்கள் தயவில் அல்ல


## கோத்தா, பசிலுக்கு முதலமைச்சர் பதிலடி

(யாழ்ப்பாணம்)

எங்கள் மக்கள் வேண்டாம் என விரட்டிய உங்களுடன், நாங்கள் ஏன் இணைந்து செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்? என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் காரசாரமாக கேள்வியெழுப்பியுள்ளார்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் கருத்துக்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே முதலமைச்சரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க....



## இளைஞரின் சடலம் கரையொதுங்கியது

(மாதகல்)

யாழ்ப்பாணம், மாதகல், திருவடிநிலை பகுதி கடலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குளிக்க சென்று காணாமற்போன இளைஞன் நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் நெல்லையடி பகுதியை சேர்ந்த ஜெயகுருந்தன் சுரேஸ் (வயது 19) என்பவரே சடலமாக கரையொதுங்கினார். மேற்படி நபரும் அவரது நண்பரும் வியாழக்கிழமை மதியம் திருவடிநிலை கடலில் குளிக்க சென்றுள்ளனர்.

இதன்போது, இருவரையும் சுழி இழுத்து சென்றுள்ளது. நீச்சல் [illegible]ிந்த நண்பர் நீந்தி கரைசேர்ந்து, தனது நண்பர் காணாமற்போன விடயத்தை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தெரிவித்து

20 ஆம் பக்கம் பார்க்க....

## சட்டத்தரணிகளுக்கு மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள சட்டத்தரணிகளுக்கு உரிய பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் மற்றும் சட்

20 ஆம் பக்கம் பார்க்க....

## 100 வயதை கடந்த 144 முதியவர்கள்

(கொழும்பு)

இலங்கையில் 100 வயதை கடந்த 144 முதியவர்கள் வாழ்ந்து வருவதாக தேசிய முதியோர் செயலகம் தெரிவித்துள்ளது.

செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளது.

10 பிள்ளைகளுக்கும் மேல் பெற்ற தாய்மாரில் 75 வயதையும் தாண்

20 ஆம் பக்கம் பார்க்க....

## வேலணை பிரதேசசபைக் காணியில் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேசசபை அமைந்துள்ள காணியிலிருந்து மனித எச்சங்கள் புதைக்கப்பட்டுள்ள நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேலணைப் பிரதேசசபைக்கு முன்பாகவிருந்த மின்பிறப்பாக்கியினை இடம்மாற்றுவதற்காக பிரதேச சபையின் முன் வலது பக்கமாக 4 கிடங்குகள் தோண்டப்பட்டன.

20 ஆம் பக்கம் பார்க்க....



## க.பொ.த (சா/த) பரீட்சையில் 94 எம்.பிக்கள் சித்தியடையவில்லை

### 142 பேருக்கு உயர்தரம் அவுட்

(கொழும்பு)

நாட்டின் அதி உன்னத நிர்வாக பீடமாகக் கருதப்படும் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 94 உறுப்பினர்கள் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தாதவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் 225 பேர் அங்கம் வகிக்கின்றோம். இதில் 94 பேர கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்த தகுதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

மேலும் 142 பேருக்கு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்த தகுதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

சாதாரண தரம், உயர்தரம் ஆகியன ஒருவரின் புத்தி கூர்மையை மதிப்பீடு செய்யும் ஒரே அளவுகோல் அல்ல என்ற போதிலும், யதார்த்தத்தில் உயர்தர சாதாரண தரப்

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஊவாவில் இன்று தேர்தல்

### ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(பதுளை)

இன்று நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை 832 மத்திய நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

தேர்தலில் வாக்களிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை கொண்டுவருவது கட்டாயமானது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

வாக்களிப்பு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக, தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாடுகளை ஏற்கும் தேசிய பிரிவு இன்று காலை 6.30 முதல் செயற்படவுள்ளது.

பதுளை மாவட்டத்திற்கான முறைப்பாடுகளை 0112877622 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும், மொனராகலை மாவட்டத்திற்கான முறைப்பாடுகளை 0112877622 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்க முடியும்.

இதேவேளை, இன்று இடம்பெறவுள்ள வாக்களிப்பில் பங்கெடுக்கும்

20 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் மற்றும் கடற்படை பாதுகாப்புடன் மாதகல் காணிகளை அபகரிக்க முயற்சி

### பொதுமக்களும், த.தே.கூட்டமைப்பும் எதிர்த்துத் தடுப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாதகல் பகுதியில் உள்ள பொது மக்களின் உறுதிக் காணிகளை முன்னறிவித்தல்கள் ஏதும் இன்றி திருட்டுத்தனமாக பொலிஸ் மற்றும் கடற்படையினருடைய பாதுகாப்புடன அளவிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரதும், பொது மக்களுடைய எதிர்ப்பாலும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

காணி அளவிடும் நடவடிக்கையினை தடுத்து நிறுத்த சென்ற தமி

20 ஆம் பக்கம் பார்க்க....

வெளிநாட்டில் படிக்க - உழைக்க - குடியேற
இப்போது யாழ் நகரின் மத்தியிலேயே
உங்கள் நம்பிக்கையின் சிகரம்
விபரங்களுக்கு 3ம் பக்கம் >>>>>>>>>
SIKARAM
சிகரம் සිකරම්
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்)
பஸ் தரிப்பிடத்திலிருந்து [illegible]

## ஸ்கொட்லாந்து பிரிவினை தோல்வி

பிரித்தானியாவில் இருந்து தனி நாடாக பிரிந்து போவதை ஸ்கொட்லாந்து மக்கள் நிராகரித்துள்ளனர். பிரித்தானியாவில் இருந்து தனிநாடாகப் பிரிந்து போவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஸ்கொட்லாந்தில் நடத்தப்பட்ட கருத்தறியும் சர்வஜன வாக்கெடுப்பில் பிரிவினைக்கு எதிராக 55.42% வாக்குகளும் பிரிவினைக்கு ஆதரவாக 44.58% சதவீதமான வாக்குகளும் பதிவாகியுள்ளன. மேலும் ஐக்கிய இராச்சியம் முழுவதிலும் அதிகாரப் பகிர்வு அமுலாக்கப்படும் என பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் உறுதியளித்தார்.

விரிவான செய்திகள் 16-ம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பழைய பாதணி என்பதால் அடிகள் கழன்று விட்டன

## எதுவும் நடக்கலாம் என்கிறார் ஏக்கநாயக்க

(கொழும்பு)

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரின் முன்னிலையில் நடைபெற்ற விழாவுக்கு, நான் அணிந்து சென்ற பாதணிகள் என்னுடையது தான். ஆனால் அது பழையது என்று கலை மற்றும் கலாசார அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையில் 20 ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் நிகழ்வு, காலி முகத்திடலில் கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிழிந்த பாதணிகளுடன் கலந்து கொண்ட அமைச்சர் டி.பீ.ஏக்க நாயக்க, சற்று தடுமாற்றநிலையில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், வீட்டிலிருந்த பாதணிகளில் இரண்டை அணிந்து சென்றேன். அந்த பாதணிகளில் அடிகள் இரண்டுமே இடைநடுவில் கழன்று விட்டன.

அந்த பாதணிகள் இரண்டுமே வெள்ளை நிறமானவை. நான் உடுத்தியிருந்த உடைக்கு பொருத்தமாக இருக்கும் என்பதனால் அதனை அணிந்துசென்றேன். ஆனாலும் நீண்ட நாட்களாக அந்த பாதணிகளை அணியவில்லை.

பழைய பாதணிகள் என்பதனால் இடைநடுவில் அடிகள் கழன்றுவிட்டன. என்ன செய்வது. விழாவுக்கு செல்லவேண்டும். சீன ஜனாதிபதியுடன் கைலாகு கொடுப்பது எப்போதாவது ஒரு தடவை கிடைக்கின்ற சந்தர்ப்பமாகும். அதனால் நான் அடிகள் கழன்றதோடு சென்றுவிட்டேன்.

நாங்கள் கிராமத்து மக்கள், மண்ணில் பாதங்களை பதித்து நிற்கின்ற மனிதர்கள். பாதணிகள் இரண்டுக்கும் நடந்ததை பற்றி நான் நினைக்கவில்லை. எனினும், படங்கள் வெளியாகியிருந்தன. எதுவும் நடக்கலாம் எனத் தெரிவித்தார். (செ-11)

# இறந்ததாகக் கூறப்பட்ட குழந்தை மரண சடங்கின் போது அசைவு!

(யாழ்ப்பாணம்)

மருத்துவர்கள் இறந்துவிட்டதாகக் கூறிய சிசுவின் இறுதிச் சடங்கின்போது சிசுவின் கைகள் அசைந்த சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 9 ஆம் திகதியன்று 9 மாத சிசுவொன்று அனுமதிக்கப்பட்டு பின்னர் நேற்று முன்தினமிரவு அச்சிசு இறந்துவிட்டதாக கூறப்பட்டு அதிகாலையிலேயே சடலமும் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்றைய தினம் சிசுவின இறுதிக் சடங்கினை உறவினர்கள் மேற்கொண்டுள்ளனர். இதன்போது சிசுவின் கை அசைவதாக கூறி இறுதிச் சடங்கினை நிறுத்திவிட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சிசுவினை எடுத்துச் சென்றுள்ளனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சுமார் ஒரு மணி நேரம் வரையில் சிசுவினை வைத்தியர்கள் பரிசோதனைக் குட்படுத்திய பின்னர் சிசு ஏற்கெனவே இறந்துவிட்டதாக தமக்கு தெரிவிக்கப்பட்டதாக பெற்றோர்கள் தெரிவித்தனா.

இது தமக்கு பலத்த சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பவானந்தராஜவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த குழந்தை அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 3 நாட்கள் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இங்கு குழந்தையின் இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு, சுவாசம் என அனைத்து அசைவுகளும் மருத்துவ மின் உபகரணங்களில் அவதானிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே குறித்த குழந்தை நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.50 மணியளவில் இறந்துள்ளது. இதன்பிறகு தாயாரின் உறுதிப்படுத்தலுடன் அதிகாலை 3.30 மணியளவில் சிசுவின் சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை குழந்தை இறக்கவில்லை என கூறி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கும் குழந்தை ஏற்கெனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர் என்றார் பணிப்பாளர். (செ-4)

# தற்கொலைக்கு முயன்ற கைதி வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய கைதி ஒருவர் தற்கொலைக்கு முயன்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச்சாட்டிலேயே இவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந் நிலையில் இவர் தற்கொலைக்கு முயற்சித்த வேளையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த எஸ்.ராஜா (வயது 32) என்பவரே இவ்வாறு தற்கொலைக்கு முயன்ற நிலையில் கடந்த புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச் சாட்டில் கடந்த ஒரு வருட காலத்திற்கு முன்னர் 4 பேரில் ஒருவராக கைது செய்யப்பட்ட சந்தேக நபரே இவ்வாறு தற்கொலைக்கு முயன்றுள்ளார் என அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

# தற்காலிக ரயில் கடவைப் பாதை அகற்றப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு

(சாவகச்சேரி)

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு போடப்பட்டிருந்த கற்கள் அகற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சாவகச்சேரிப் சப்பச்சிமாவடிப் பகுதியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு போடப்பட்டிருந்த தற்காலிக பாதைகளை அகற்றும் பணியை ரயில் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு கூடிய மக்கள், குறித்த கற்களை அகற்றவேண்டாம் என்றும், தமது காணிகளுக்கு செல்வதற்கு அந்த இடங்களில் ரயில் கடவைகள் அமைக்கவேண்டும் என்றும் தெரிவித்தனர். மக்கள் திரண்டு தமது எதிர்பபை வெளியிட்ட நிலையில் அங்கு பொலிஸார் வந்து சமரச முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் சம்பந்தப்பட்ட ரயில்வே அதிகாரிகள் அங்கு வராததை அடுத்து மக்கள் தமது போராட்டத்தை கைவிட முடியாது என்று அறிவித்துள்ளனர். (செ-11)

# இலங்கை நல்லிணக்க பணியகம் ஐ.நாவிடம் உதவி கோரவில்லை

## பான் கீ மூனின் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து இலங்கை எதிர்கொண்ட பிரச்சினைகளை கையாள்வதற்காக அந்த நாடு அமைத்துவரும் விசேட நல்லிணக்க பணியகத்துக்கு ஐ.நாவிடம் உதவி கோரவில்லை என ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

அங்கத்துவ நாடுகள் நிபுணத்துவ சேவைகளை கேட்கும் போது, ஐ.நாவின் அரசியல் விவகார திணைக்களம் வழங்கி வருகின்றது.

ஆயினும், தனது நல்லிணக்க பணியகத்துக்கு வழங்குமாறு இந்த திணைக்களத்துக்கு வேண்டுகோள் ஏதும் கிடைக்கவில்லை என செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாறிக், நிபுணர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமை நிறுவனம் ஏற்பாடு செய்த மனித உரிமை மீறல்களுக்கு எதிரான விசாரணையை எதிர்த்துள்ள இலங்கை ஒரு விசேட குழுவை நல்லிணக்கத்துக்கு உருவாக்கி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Mega
Win 75%
ஸ்கொலர்ஷிப்
நாளை மெகா புலமைப்பரிசில் பரீட்சை, இலவச அனுமதிகளை முன்கூட்டியே பெற்றிடுங்கள்.
Information Technology
English Language
Office Administration
Multimedia Training
Web Design & Development
Tally & QB Accounting
Hardware & Networking
Vocational Soft Skills
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ்.நகரில்
2G ஸ்ரான்லி வீதி, 021-2225677

# இராணுவமயமாக்கல் வாசுதேவ கவலை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது குறுகிவரும் ஜனநாயகம் மற்றும் அதிகரித்து வரும் இராணுவமயமாக்கல் குறித்து அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கவலை வெளியிட்டுள்ளார்.

தேசிய சமாதான சபை ஏற்பாடு செய்த மத ஒருங்கிணைப்பு தொடர்பான தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஐக்கியமே தேசிய நல்லிணக்கத்தையும் ஜனநாயகத்தை உறுதி செய்ய ஒரே வழியாகும்.

ஜனநாயகத்தின் மூலம் நாட்டின் அனைத்து குடிமக்களும் சமத்துவதை பெறும் இன சகவாழ்வை [illegible] முடியும் என வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# மரண அறிவித்தல்

## கந்தையா விநாயகமூர்த்தி



காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதி இலக்கம் 6ஜ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விநாயகமூர்த்தி நேற்று (19.09.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சின்னத்தம்பியின் அன்புச் சகோதரனும், சிவமணியின் மைத்துனரும், தங்கமலர், றஞ்சினிதேவி, தர்மராணி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் மைத்துனரும் இராஜேந்திரம், பரமலிங்கம், கந்தசாமி, கெங்காதரன், சுமதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.09.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.06, பழம் வீதி, கந்தர்மடம்.
0214900657

தகவல்:- குடும்பத்தினர்.

(7638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பிரச்சினை என்ன? முதலில் அதைக் கூறுங்கள்

## மாவை எம்.பியை நோக்கி அமைச்சர் கெஹலிய





தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினை என்ன என்பதனையும் அதற்கான தீர்வு எதுவென்பதையும் முதலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா கூறவேண்டும். பிரச்சினை என்னவென்று அவர்கள் கூறாவிடின் நாம் எவ்வாறு பதில் கூற முடியும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கேள்வியெழுப்பினார்.

இலங்கையில் சமாதானமும் பாதுகாப்பும் அரசியல் ஸ்திரமும் காணப்படுகின்றமையினாலேயே இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் எமக்கு உதவி செய்கின்றன. இலங்கை- சீனர் விடம் மட்டுமல்ல ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடமும் உதவிகளைப் பெறுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனா,இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய அனைத்து நாடுகளிடமும் நாங்கள் உதவிகளையும் கடன்களையும் பெறுகின்றோம். அதாவது அணிசேரா வெளியுறவுக் கொள்கையைக்கொண்ட இலங்கையானது அனைத்து நாடுகளுடனும் சிறந்த உறவைப் பேணுகின்றது.

இந்தியாவுடன் சம்பூர் மின்னுற்பத்தி குறித்த உடன்படிக்கையை செய்துள்ளோம். இது தற்போதைய நிலைமையில் ஒரு முக்கிய உடன்படிக்கையாகும். அதேபோன்று சீனாவுடன் 27 உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஜப்பானுடன் ஒளிபரப்பு குறித்த உடன்படிக்கையை செய்துள்ளோம்.

அந்தவகையில் இலங்கைக்கு ஸ்திரமான பொருளாதார மற்றும் சிறந்த எதிர்காலம் இருப்பதை அறிந்துகொண்டே உலகின் மிகப் பெரிய நாடுகள் எமக்கு உதவி செய்கின்றன. மக்களின் ஆதரவு இல்லாத நாடுகளுக்கு எந்த நாடும் கடன் கொடுக்காது. கடனை திருப்பிச் செலுத்த முடியாவிடின் யாரும் கடன் தரமாட்டார்கள். ஆனால் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து இந்த நாடுகள் நம்பிக்கை வைத்துள்ளன.

குறிப்பாக இலங்கையில் சமாதானமும் பாதுகாப்பும் அரசியல் ஸ்திரமும காண்ப்படுகின்றமையினாலேயே இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் எமக்கு உதவி செய்கின்றன என்பதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை சீனாவிடம் மட்டும் உதவிகளைப் பெறுவதாக யாரும் கருதக்கூடாது. இலங்கை, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடமும் உதவிகளைப் பெறுகின்றது. ஆனால் இலங்கை சிறந்த நிலையான மற்றும் சமாதானமான பாதுகாப்பான நாடாக இருக்கின்றமையினால்தான் இவ்வாறு உதவிகள் கிடைக்கின்றன. எமது நாட்டின் மீது உலகின் பெரிய நாடுகள் நம்பிக்கை வைத்துள்ளன.

**கேள்வி: இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார் இது குறித்து உங்கள் கருத்து?**

பதில்: அவருக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

**கேள்வி: புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அவர் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காவிடின் அறவழிப் போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளாரே?**

பதில்: தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினை என்ன என்பதனையும் அதற்கான தீர்வு எதுவென்பதையும் முதலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா கூறவேண்டும்.

பிரச்சினை என்னவென்று அவர்கள் கூறாவிடின் நாம் எவ்வாறு பதில் கூற முடியும். அவரின் அந்த அறிக்கையை நான் பார்த்தேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிடின் ஏதோ சாத்வீக போராட்டம் என்று கூறியிருந்தார். முதலில் பிரச்சினை என்னவென்று கூறுங்கள். பின்னர் நாங்கள் பதிலளிக்கின்றோம்.

**கேள்வி: நீங்கள் கூறுவதை நாங்கள் அறிக்கையிட்டவுடன் கூட்டமைப்பு அதற்கு பதிலளிக்கும்?**

பதில்: அவர்கள் அதற்கு பதிலளித்தால் நானும் பதிலளிக்கின்றேன். இதுதான் எமது பிரச்சினை என்று முதலில் கூறுங்கள்.

**கேள்வி: சாத்வீக போராட்ட அறிவிப்பை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: அது இரண்டாவது விடயம். முதலில் பிரச்சினையைக் கூற வேண்டும் என அவர் மேலும் பதிலளித்தார். (இ)

## இலங்கை நீதியமைச்சர் ஹக்கீம் ஈரான் நீதியமைச்சருடன் சந்திப்பு

(கொழும்பு)

47 நாடுகளின் நீதியமைச்சர்கள் அங்கம் வகிக்கும் ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஈரான் சென்றுள்ள நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், அந் நாட்டு நீதியமைச்சர் முஸ்தபா பூர் முஹம்மதீ உடன் கடந்த செவ்வாய்க்கிழமை இருதரப்புப் பேச்சில் ஈடுபட்டார்.

இதன்போது இலங்கையின் நீர்ப்பாசன, கிராமிய மின்சாரத் திட்டங்களுக்கு உதவிவரும் ஈரானிய அரசாங்கத்திற்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளின் முன்னெடுப்புகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் உட்பட ஏனைய சர்வதேச அரங்குகளில் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை ஈரான் கடைப்பிடிப்பது தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கையின் நீதியமைச்சர் ஹக்கீம் முன்னர் ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் சட்ட ஆலோசனை மன்றத்தின் தலைமைப் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அமைச்சர் ஹக்கீமுடன் நீதியமைச்சின் செயலாளர் கமலினி த சில்வா, அமைச்சரின் சட்ட ஆலோசகர் எம்.எச்.எம். சல்மான் ஆகியோரும் ஈரான் சென்றிருந்தனர். (இ)


வெளிநாட்டில் படிக்க - உழைக்க - குடியேற
இப்போது யாழ் நகரின் மத்தியிலேயே
உங்கள் நம்பிக்கையின் சிகரம்

| | |
|---|---|
| வெளிநாட்டுக் கல்வி | UK, Australia, New Zealand, Switzerland, Canada, Singapore, Malaysia வில் பல்கலைக்கழக அனுமதி, விசா, வேலைவாய்ப்பு |
| வெளிநாட்டுத் தொழில் | Singapore, Malaysia, Switzerland, New Zealand இல் வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சி, வேலைவாய்ப்பு, குடியுரிமை ஏற்பாடு |
| குடியுரிமை | Australia, Canada, New Zealand நிரந்தர குடியுரிமை |
| விசா சேவைகள் | Visit Visa, Work Visa, Dependant Visa, Spouse Visa & Visa Rejection Appeal |
| உள்நாட்டு கற்கைநெறிகள் | Hotel Management, English the Easy Way, ஊடகக் கற்கைநெறி & aat |

அந்தந்த நாடுகளிலேயே எமது கிளை நிறுவனங்கள் மூலம், வேலைவாய்ப்பு, குடியுரிமை ஏற்பாடுகள் செய்துதரப்படும்.

SIKARAM
சிகரம் සිකරම්
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, (வைத்தியசாலை பின்புறம்) யாழ்ப்பாணம்
0773 616 798, 021 300 80 60
www.sikaram.lk
(சி-8529)


## இராசி பலன்

20.09.2014
(புரட்டாதி 4, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துவாதசி முழுவதும்
பூசம் முற்பகல் 9.10 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சுபநேரம் 3.03 -4.33 மணிவரை
முதலாம் புரட்டாதிச் சனி

வளவன்

**மேடம்:** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர்களின் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி நிம்மதியைக் கொடுக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** கனிவான பேச்சுக்களால் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், உறவினர்களின் வருகையுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாறி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும் நாள், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளில் சில திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்:** உறவினர்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செய் தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியம் சீராகும்.

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும். தொடர்வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விபத்தில் சிக்கிய இளைஞர்கள் வைத்தியசாலையில் அனுமதி

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வடி ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் பருத்தித்துறை வீதி குஞ்சர் கடைச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இடைக்காடு அச்சுவேலியைச் சேர்ந்த வருணன் (வயது-26), சிவாஸ்கரன் (வயது-26) ஆகிய இரு இளைஞர்களே படுகாயமடைந்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து அச்சுவேலி நோக்கி சென்றவேளையே இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் ஒருவர் மந்திகை வைத்தியசாலை நோயாளர் விடுதியில்இருந்து கடந்த சில நாட்களாக சிகிச்சை பெற்று விட்டு நேற்று முன்தினம் தான் வீடுதிரும்பியிருந்தார்.

இந் நிலையில் மீண்டும் விபத்தில் சிக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

நன்றி-மிரர்




# தமிழினத்தின் அழிப்பை தடுக்க கோரும் பிரேரணை மீண்டும் முன்மொழியப்படும்

## சிவாஜிலிங்கம் விடாப்பிடி

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களை இனப்படுகொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறிமுறையினை ஏற்படுத்தக் கோரும் பிரேரணையினை வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் மீண்டும் முன்மொழியவுள்ளதாக மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இப்பிரேரணையின் கனதி போதாதென்றால் பிரேரணையில் குறிப்பிட்டுள்ளவற்றுக்கு 150 பக்கம் கொண்ட ஆதாரத்தையும் மாகாண சபையில் முன்வைக்க தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ம்தியம் 12.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

5 மாதங்களுக்கு முன்னர் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட இப்பிரேரணைக்கு இதுவரை கட்சியின் தலைமைப்பீடம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனினும் மீண்டும் எனது இப்பிரேரணை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின்தலைவரும்பொதுச் செயலாளருமான மாவை. சேனாதிராசா, வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 29 வடமாகாண சபை உறுப்பினர்கள், 11 கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ளேன்.

யுத்தத்திற்கு பின்னரும் தமிழர் தாயகங்களில் நிலப்பறிப்பு, கட்டாயக்கருக்கலைப்பு, திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றம், இராணுவ அச்சுறுத்தல் என்பன தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. இவையும் இன அழிப்பின் ஒரு அங்கமாகத்தான் பார்க்கப்படுகின்றன. ஆகவே தொடரும் இனப்படுகொலையிலிருந்து தமிழினத்தைப் பாதுகாக்க சர்வதேச பொறிமுறையினை தமிழ் மக்களின் அரசான வடக்கு மாகாண சபை கோருவது பிழையானதொன்றல்ல.

வடக்கு மாகாணசபை மட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களும் இப்பிரேரணையினை நிறைவேற்ற வேண்டும்.

இப்பிரேரணையினை கண்டு இலங்கை அரசு தான் பயப்பட வேண்டுமே. எமது கட்சியினர் பயப்படத் தேவையில்லை.

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என நிரூபிக்கப்பட்டால் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் அதில் நாங்கள் சேர்ந்து வாழ்வதா? பிரிந்து வாழ்வதா? எனத் தீர்மானிப்போம்.

வடக்கு மாகாண சபை இலங்கை வாழ் தமிழ்மக்களின் குரலாகத்தான் ஒலிக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கான கால எல்லை இன்னமும் 42 நாட்களே உள்ளதனால் அதற்கிடையில் அனைவரையும் சாட்சியமளிக்குமாறும் அவர் கோரியுள்ளார். (இ-4)

## வலய மட்ட கண்காட்சி இரு தினங்கள் நடைபெறும்

(கரணவாய்)

வடமராட்சி வலயத்தால் நடத்தப்படும் வலயமட்டக் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல் கள் அமைச்சின் செய லாளர் எஸ்.சத்தியசீலன், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற கல்விக் கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட கண்காட்சிப் பொருட்கள் ஒவ்வொரு பாடரீதியாக காட்சிப் படுத்தப்படவுள்ளன. (இ-60)

## ஜனாதிபதி திறக்கவுள்ள ஆய்வுகூடத்தை வடக்கு ஆளுநர் சென்று பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மகிந்தோதய ஆய்வு கூடத்தை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கடந்த வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்று நாட்கள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் உள்ள 6 பாடசாலைகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய ஆய்வு கூடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இதற்கமையவே ஆளுநர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மகிந்தோ தய ஆய் வுகூட கட்டடத் தொகுதி களை நேரில் சென்று பார்வையிட்டு அதன் கட்டட வேலைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (இ




## திருமறைக்கலாமன்றம் நடத்தும் கலைவிழா இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் நடத்தும் இருநாள் கலைவிழா இன்றும் நாளையும் மாலை 6.45 மணிக்கு இல 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.


கலைவிழாவின் முதல் நாள் நிகழ்வுகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன் சிறப்பு அரங்க ஆற்றுகைகளாக யாழ்.கொக்கு வில் இந்துக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் மதுரையம்பதி(கண்ணகி) நாட்டிய நாடகமும், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் வழங்கும் வீரன் தாவீதன் வடமோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறும்.

இவ்விரு ஆற்றுகைகளும் இப்பாடசாலை மாணவர்களால் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்ற படைப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் வழங்குவார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளாக கலைத்தூது அழகியல்கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன் சிறப்பு ஆற்றுகையாக திருமறைக் கலாமன்றக்கலைஞர்களால் அண்மையில் புதிதாக தயா ரிக்கப்பட்ட குசேலர் இசைநாடகமும் மேடையேற்றப்படும் நிகழ்வில் சிற ப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் வழங்குவார்.

எனவே கலைவிழாவை கண்டு கழிக்க கலை ஆர்வலர்கள் அனைவரையும் வருகை தருமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ



வேலணை பிரதேச சபை வளாகத்திலிருந்து மனித எச்சங்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நேற்றுக்காலை மீட்கப்பட்டிருந்தது. இதனை வடக்கு மாகாண விவசாய அமை ச்சர் பொ.ஐங்கரநேசன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர்களான என்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன் மற்றும் வேலணை தவிசாளர் எஸ்.சிவராசா, வல்வெட்டித்துறை நகரசபை பிரதித் தலைவர் எஸ்.சதீஸ் ஆகியோர் பார்வையிட்டனர். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வன்முறையல்ல இனவாதச் செயலாகும்

## ஹஸனலி குற்றச்சாட்டு

ஜும்மா பள்ளிவாசல், அல் அதான் வித்தியாலயம் ஆகியவற்றின் மீது மேற் கொள்ளப்பட்ட கல் வீச்சு தாக்குதலும், முச்சக்கர வண்டியொன்று நொருக்கப்பட்டமையும், இளைஞர்கள் ஐவர் தாக்கப்பட்டமையும் தேர்தலையொட்டிய நடவடிக்கைகளாகத் தோன்றவில்லையென்றும், அத் தாக்குதல்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதக் கும்பல் மேற்கொண்டவையாக இருக்கலாமென்று கூறப்படுவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹஸன் அலி தெரிவித்தார். நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் நடைபெற்ற இச் சம்பவங்களை அடுத்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸன அலி, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் ஆகியோர் பள்ளிவாசல் தலைவரையும், பாடசாலை அதிபரையும் நேரில் சென்று சந்தித்து நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

பொலிஸில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ள சம்பவங்களின் பின்னணி பற்றி இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தேர்தல் மிகவும் நெருங்கி வரும் இச் சந்தர்ப்பத்தை இன வாதிகள் தங்களுக்கு மிகவும் சாதகமாக பயன்படுத்தி இவ்விதமான விஷமச் செயல்களில் ஈடுபடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. தாம் ஊவா மாகாண பிரதி பொலிஸ்மா அதி பருடன் தொடர்பு கொண்டமையை அடுத்து சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவதாக அவர் உறுதியளித்தார் என ஹஸன் அலி எம்.பி கூறினார்.

தற்சமயம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் ஈரானில் நடைபெறும் -நீதியமைச்சர்கள் கலந்து கொளளும் ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் சட்ட ஆலோசனை மன்ற மாநாட்டில் பங்கேற்றிருக்கிறார் எனவும், அவருக்கு இங்குள்ள நிலைமை குறித்து அறிவிக்கப்பட்டதாகவும் ஹஸன் அலி எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ)


## நன்றி தெரிவிக்கின்றோம்



பிறவுண் வீதி 1, ஆம் ஒழுங்கையையும் அன்ன சத்திர ஒழுங்கையையும் இணைக்கின்ற புகையிரத கடவை பாதையை எங்களின் வேண்டுகோளுக்கு இணங்க வந்து அவ்விடத்தை பார்வையிட்டு உடனடியாக அதனை ஒழுங்கு செய்துவிட்டு தந்து மக்கள் போக்குவரத்தை இலகுவாக்கி தந்தமைக்கு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் யாழ்.மாநகரமுன்னாள் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களுக்கும் அவர்களுடன் வருகை தந்த ஏனைய அதிகாரிகளுக்கும் மற்றும் புகையிரத அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவ்விடத்திலே சமிக்ஞை விளக்குகளை பொருத்தி சிறுவர்கள், முதியோர்கள் இலகுவாக பயணிக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைத்து தருமாறு அவ்வூர் மக்களாகிய நாம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கைவாழ் மக்களும் அன்னசத்திர ஒழுங்கை வாழ் மக்களும் (7637)



## தேவை

யாழ். நகர மத்தியில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1.STORE KEEPER
2. CLEANERS (சுத்திகரிப்பாளர்கள்)
3.தேநீர் மற்றும் பழச்சாறு தயாரிப்பவர்கள்
4.சமையற்காரர்கள்
I. இட்லி,தோசை,சப்பாத்தி,பூரி,வடை தயாரிக்கதெரிந்தவர்கள்
II. சைனீஸ் (CHINESE) வகை சமையல் தெரிந்தவர்கள்
FRIED RICE, BIRIYANI, SOUP, CHILLI PARATTA.
5. சமையல் உதவியாளர்கள்/HELPERS

உணவு மற்றும் தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். பெண்களுக்கான பிரத்தியேகமாக பாதுகாப்பான தங்குமிட வசதியுண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
60, STANLEY ROAD
ஆரியகுளச் சந்திக்கருகில்
தொலைபேசி இலக்கம்:-
077 3478427,
021 221 9946
(7636)



## The Open University of Sri Lanka Jaffna Regional Centre

### Academic year-2014/2015

| Programme | Entry Qualification | Closing Date |
|---|---|---|
| Bachelor of Technology (B.T) | Three Passes in G.C.E. A/L physical science stream or Successful completion of Foundation courses in Technology or any other equivalent Qualification *Those who are waiting for the G.C.E A/L results can apply | 30th September 2014 |
| Bachelor of Industrial Studies | Three Passes in G.C.E. A/L any Stream or Successful completion of Foundation courses in Science or any other equivalent Qualification *Those who are waiting for the G.C.E A/L results can apply | 30th September 2014 |
| Bachelor of Science (B.Sc) | Three passes in G.C.E. A/L Science/ Maths Stream or Successful completion of Foundation courses in Science or any other equivalent Qualification | 07th October 2014 |

Applications are issued from following centres.

| | |
|---|---|
| The Open University of Sri Lanka<br>Jaffna Regional Centre,<br>Brown Road, Kokuvil, Jaffna.<br>Tel: 0212223374 | The Open University of Sri Lanka<br>Kilinochchi Study Centre,<br>155th Mile post, Kandy Road,<br>Kilinochchi.<br>Tel: 0212283970 |

Note:
Completed applications should be handed over or Sent by Registered post to the Assistant Director of the Jaffna Regional Centre on or before the closing date.
Further details can be obtained from www.ou.ac.lk

Registrar,
Open University of Sri Lanka



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 56 1/4 சூரி,செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: B/3595

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா: 35 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3597

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 9 1/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/3600

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 21 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3501

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 35 1/4 சூரி, செவ்
தகைமை/தொழில்: A/L/ முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: G/2789

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 25
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: வைத்தியர்
தொ.இ: G/2790

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 21
உயரம்: 164cm
தகைமை/தொழில்: BSC
தொ.இ: G/2791

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 42 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/2794

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு பௌத்த பிக்குதான் முழுக்காரணம்

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசல் மீதான பெற்றோல் குண்டு தாக்குதலுக்கு புத்த பிக்குவே முழுக்காரணம் என்று பகிரங்கமாக கூறுவேன்.

ஏற்கனவே காளிஅம்மன் கோவிலை அங்கிருந்து அகற்றிய புத்த பிக்குவே தற்போது பள்ளி வாசலை அகற்றும் முயற்சியில் ஈடுபாட்டுள்ளார் என்றும் தமிழ் முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதனை மறந்ததன் விளைவே இது என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவ்ர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

அமைச்சர் பௌசியும் எம்.பி அஸ்கரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்காக மார்க்கத்தை காட்டிக்கொடுக்கின்றனர். பள்ளிவாசலில் பட்டாசினாலேயே வெடி ஏற்பட்டுள்ளதாக ஒரு பொய்யான பிரசாரத்தை அவர்கள் மேற்கொண்டுள்ளமை வேதனை அளிக்கின்றது.

மார்க்கத்தை மறந்து அல்லாவை மறந்து அவர்கள் நடந்தாலும் அல்லா ஒருநாள் கேள்வி கேட்பார் என்பதனை அவர்கள் மறந்து விடக்கூடாது.

தமிழ்- முஸ்லிம் மக்களின் இனநல்லுறவு என்பது இன்று மிக முக்கியமானது. நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது காலத்தின் தேவை. இதனை அமைச்சர் ரவூப் ஹக்கீம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் விட்டு விலகி வர வேண்டும். எமது தலைவர் அஷ்ரப்பின் வழியில் அவர் செல்ல வேண்டும். அஷ்ரப்பின் கனவினை நனவாக்க அவர் செயற்படல் வேண்டும்.

நாம் பள்ளி உடைப்பு தொடர்பான ஆதாரங்களை பொலிஸாருக்கு வழங்கியும் அவர்கள் சட்ட நடவடிக்கை எதனையும் எடுக்காமையானது பொலிஸாரின் திறனற்ற செயற்பாட்டினையும் எமக்கு காட்டுகின்றது என அவர் மேலும் குற்றம்சாட்டியுள்ளார். (இ)

# தேர்தலினை இலக்கு வைத்து விலை குறைக்கப்படவில்லை

## அரசு விளக்கம்

(கொழும்பு)

தேர்தலை இலக்கு வைத்து எரிபொருளுக்கான விலைகள் குறைக்கப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தல்களை இலக்கு வைத்து அரசாங்கம் எரிபொருளுக்கான விலைகளை குறைக்கவில்லை என பெற்றோலிய வள அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைப்பு குறித்து கடந்த மூன்று மாதங்களாக ஆராயப்பட்டு வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலைகளை குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறைந்த விலைகளில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நலன்களை வழங்கும நோக்கில் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டதாகவும், இதில் எவ்வித தேர்தல் நோக்கங்களும் கிடையாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# புகலிடம் கோரியவர்களை அவுஸ்.அரசு ஆபத்தான வழியில் திருப்பியனுப்பியது

அவுஸ்திரேலியாவிற்கு அகதிகளாக புகலிடம் கோரிவந்த புகலிடக் கோரிக்கையாளர்களை ஆபத்தான வழிகளில் அவுஸ்திரேலியா திருப்பி அனுப்பியுள்ளமை அம்பலமாகியுள்ளது.

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் வெளியிட்ட கருத்து ஒன்றின் மூலம் இந்த தகவல்கள் அம்பலமாகியுள்ளதாக அவுஸ்திரேலிய செய்தி சேவை ஒன்று தெரிவித்துள்ளது.

ஓராண்டு காலப்பகுதியில் 12 புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுகளை திருப்பி அனுப்பி வைத்ததாக ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார். இதில் 4 படகுகள் ஒரேஞ் லைப் போட்ஸ் எனப்படும் ஆபத்தான படகுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 90 | 80 |
| தக்காளி | 20 | 60 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 40 | 60 |
| கோவா | 60 | 80 | 60 | 70 |
| கரட் | 60 | 60 | 70 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 90 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 80 |
| பாகற்காய் | 90 | 100 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 40 | 100 |
| பயற்றங்காய் | 40 | 50 | 50 | 50 |
| லீக்ஸ் | 120 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 50 | 50 | 120 |
| போஞ்சி | 120 | 120 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 105


என். பிரியங்கா




ரி.மோகன்




தி.துசிதா




க.கங்கைமலர்




வீ.சாமிலா




சி.ராஜ்மோகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. நகரப்பகுதியில் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படாமையால் பயணிகள் அவதி

## அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோருகின்றனர்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படாமையால் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள், நோயாளர்கள், மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள் எனப் பல தரப்பட்டவர்கள் வீதியருகே நீண்ட நேரம் காத்திருந்து பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் சிரமங்களை எதிர் கொள்வதாக போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து ஆயிரக் கணக்கான பயணிகள் தினமும் தமது தேவையின் நிமித்தம் பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

இவ்வாறு பயணிக்கும் பயணிகளே வீதியோரங்களிலும்




மர நிழல்களின் கீழும் நின்று கால்கடுக்க பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது.

2010 ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இன்று வரை நிரந்தர பேருந்து தரிப்பிடம் இல்லாமல் கிளி நொச்சி கனகபுரம் பொதுச் சந்தைக்கு முன்னால் பேருந்துகள் தரித்து நின்று பயணிகளை ஏற்றுவதால் அவ்விடத்தில் சன நெரிசல் ஏற்பட்டு சில நேரங்களில் வீதி விபத்துக்களும் இடம் பெறுகின்றன.

யுத்தத்திற்கு முன்னர் அமையப் பெற்றிருந்த பேருந்து நிலையத்தில் மலசலகூட வசதிகள், கட்டட வசதிகள் பல அமைக்கப்பட்டு மக்கள் பயணம் செய்வதற்கு இலகுவாக அக்கட்டடங்களினுள் பெயர்கள் இடப்பட்டிருந்தன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் மக்களின் தேவையின் நிமிர்த்தம் ஆரம்பத்தில் அம்பாள் குளம் சந்தைக்கு அருகில் கரைச்சி பிரதேச சபையினரால் ஒரு கட்டமும் கட்டப்பட்டு மலசலகூட வசதிகளுடன் கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையமென பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருந்தது.

அதன்பின் அம்பாள் குள சந்தை கிளிநொச்சி ஏ-9 வீதியின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டு அவ்விடத்திற்கு நகர்ந்ததும் அப்பேருந்து கட்டட சீற்றுக்கள் அகற்றப்பட்டு வெறும் கட்டடமே இருந்தது.

கிளிநொச்சி மாவட்டம் பல கிராமங்களை உள்ளடக்கிய பரந்து பட்ட பிரதேசமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வட்டக்கச்சி, பரந்தன், மாங்குளம், ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம், யோகபுரம், முழங்காவில், மல்லாவி, உருத்திரபுரம், பூநகரி போன்ற பல பிரதேசங்களுக்கு பயணிக்க குறித்த வீதியோரத்திலேயே நின்று மழைகாலத்திலும் வெயிலிலும் காய்ந்து பயணிக்க வேண்டியுள்ளது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் வீதி புனரமைப்புக்கள் இடம்பெற்று முடிந்த நிலையிலும் இம் மாவட்டத்திற்கென ஏன் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படவில்லையென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் பொருத்தமான இடத்தை தெரிவு செய்து தாமதமின்றி பேருந்து தரிப்பிடத்தை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோருகின்றனர். (2-271)

# சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்





(கிளிநொச்சி)

சிறுவர் மற்றும் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விழிப்புணர்வு பற்றிய ஓர் கலந்துரையாடல் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் தொடர்பாக ஆராயப்பட்ட போது பெற்றோரின் அக்கறையின்மையே இதற்குக் காரணமென பாடசாலைகளின் மூலம் அறியப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாளாந்தம் வைத்தியசாலையில் 20 இற்கு மேற்பட்ட குடும்ப வன்முறைகள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் இவற்றிற்கு வைத்தியசாலையில் இருந்து கொண்டே சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென உளநல வைத்தியரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டு இதற்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் கிராமங்கள் தோறும் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தற்கொலை வீதம் நாட்டில் அதிகரித்துள்ளது. அதிதீவிர மது பாவனை, தொடர் குடும்ப வன்முறை, தீராத நோய்கள், தகாத உறவுகள் என்பன நடைபெற்று வருவதை அவதானிக்கக்கூடியதாக வுள்ளதாகவும் இதற்காக கிராம மட்ட ரீதியில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுவதாகவும் உளவள வைத்தியரால் தெரிவிக்கப்பட்டது.

முதியவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கு அக்குடும்பத்தினரின் ஒத்துழைப்பு அவசியமானது என்பதை கிராம அலுவலர் மூலம் வலியுறுத்தி முதியோர் சங்கங்கள் ஊடாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளை கொண்ட தாய்மார்கள் வெளிநாடு செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது என சம்பந்தப்பட்டவர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

பெண்கள் சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை வழங்குவதற்கு பிரதேச செயலகத்தில் இதற்கான வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் கூறப்பட்டது.

தற்போது நீதிமன்ற வழக்குகள் தாமதமாக விசாரிக்கப்பட்டுவருவதால் துரித கதியில் தீர்வுகளைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு கோரப்பட்டது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையினால் மாணவர்கள் மத்தியில் மன அழுத்தம் அதிகரித்துள்ளதாக கிராம அலுவலர்கள், வைத்திய துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

வன்முறைகளைக் குறைக்க கிராம மட்டத்தில் விழிப்புணர்வுகள் நடத்தப்பட்டாலும் உடனடி நிவாரணம் வழங்க அரச மட்டத்திலிருந்து எவ்வித உதவிகளும் கிடைப்பதில்லையென கிராம மாதர் சங்க அமைப்பினரால் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது. இதற்கு யு.என்.எச்.சி.ஆர். (UNHCR) நிறுவனத்தினரால் ஓரளவு உதவிகள் வழங்கப்படுவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கு கரைச்சி பிரதேச செயலகத்தால் ஒழுங்கமைத்து நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வளவாளர் களாக கிளி. மாவட்ட உளநல வைத்தியர் மா.ஜெயராஜா, இல வச சட்ட ஆலோசனை நிலைய அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கில் அனைத்து கிராம சேவையாளர்கள், பிரதேச மட்ட மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், பிரதேச செயலக கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (2-254)

## குழு மோதலில் ஈடுபட்ட ஆறு பேர் பொலிஸாரால் கைது

வவுனியா, தெற்கிலுப்பைக் குளம் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் குழு மோதலில் ஈடுபட்ட ஆறு பேரை தாம் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கோவிலில் பூசைகள் இடம்பெற்றபோது இக் குழு மோதல் இடம்பெற்றது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த வவுனியா பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை இருவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

இருவருக்கும் பிணை வழங்கப்பட்டது. இத்தனையடுத்து இச் சம் பவத்துடன் தொடர்புடைய மேலும் நான்கு பேரை கடந்த புதன்கிழமை நீதிமன்றில முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (2-250)

# வடமாகாண கல்வியமைச்சின் நிதியில் பத்து பாடசாலைகளுக்கு பொருட்கள்

(கிளிநொச்சி)

வடமாகாண அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளை யாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜாவின் வழிகாட்டலின் கீழ் கிளிநொச்சியில் பின் தங்கிய பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளின் வளப் பற்றாக்குறையை போக்கும் நோக்குடன் கிளிநொச்சியின் பத்து பாடசாலைகளுக்கு தேவையான பொருட்கள் கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஒத்துழைப்புடன் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி பளை இந்து ஆரம்ப பாடசா லைக்கு மின்பிறப்பாக்கி 95 ஆயிரம் ரூபா, கிளாலி அ.த.க. பாடசாலைக்கு மின் பிறப்பா க்கி 95 ஆயிரம் ரூபா, பளைகோவில் வயல் அ.த.க. பாட சாலைக்கு மின்பிறப்பாக்கி 95 ஆயிரம் ரூபா, உமையாள்புரம் அ.த.க.பாட சாலைக்கு மின் பிறப்பாக்கி 95 ஆயிரம் ரூபா, அல்லிப் பளை அ.த.க பாடசா லைக்கு மின்பிறப்பாக்கி 95 ஆயிரம் ரூபா, குமாரசாமிபுரம் அ.த.க.பாட சாலைக்கு மின் பிறப்பாக்கி 95 ஆயிரம் ரூபா, குமாரசாமிபுரம் வித்தியாலயத்திற்கு கணனி உபகரணம் 90 ஆயிரம் ரூபா, வேரவில் இந்து உயர் வித்தியால்யத்திற்கு போட்டோ கொப்பி இயந்திரம் 95 ஆயிரம் ரூபா, கிளி இராமகிருஸ்ண வித்தியாலயம் அலுவலக உபகரணம் ஒரு இலட்சம் ரூபா, கிளி. திருவள்ளுவர் வித்தியாலயம் ஒரு இலட்சம் ரூபா என வடமாகாண கல்வி அமைச்சின் நிதியின் கீழ் பொரு ட்கள் வழங்கப்பட்டுள்ளன.


இந்நிகழ்வில் கலந்து கொண்டு பொருட்களை அந்தந்த பாடசாலை அதிபர்களிடம் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வழங்கி வைத்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்


முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட குள்ளக்கோள், செரிஸ். இதையும் புளூட்டோபோல கோள் என்று கருதினர். பின்னர் குள்ளக் கோள் என்று வகைப்படுத்தினர். 950 கிலோமீட்டர் விட்டம் கொண்ட செரிஸ் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட குள்ளக்கோள் களில் மிகச் சிறியது. பூமியின் நிறையில் 0.015 சதவிகிதம்தான் இதன் நிறை!



செரிஸ் தவிர ஏனைய குள்ளக்கோள்கள், குயப்பர் வளையத்தில் உள்ளன. குயப்பர் வளையம் என்பது புளூட் டோவுக்கு அப்பால் சூரியனைச் சுற்றி வடை போன்ற வடிவில் வான் பொருட்கள் மிகுந்துள்ள பகுதி!





சுமார் 560.9 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றும் எரிஸ் என்ற குள்ளக் கோள்தான் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட குள்ளக் கோள்களில் மிகப்பெரியது. 2300 கிலோ மீட்டர் விட்டம் கொண்ட எரிஸ் புளூட்டோவை விட 28 சதவீதம் அதிக நிறை கொண் டது. இந்தக்கோள் சில காலம் பத்தாவது கோள் என்று சில ரால் அழைக்கப்பட் டது. பின்னர் புளூ ட்டோ போலக் குள்ளக் கோள் ஆனது!





1930 இல் புளூட்டோ கண்டுபிடிக்கப்பட் டம், அதேபோல ஒரே குணம் உடைய பல நூறு வான் பொருட்களை வான வியலாளர்கள் புளூ ட்டோ விற்கு அப்பால் சூரியனைச் சுற்றி வரு வதைக் கண்டனர். இவை எல்லாம் கோள்கள் எனக் கொண்டால், சூரியக் குடும்பத்தில் சில நூறு கோள்கள் என ஏற்க வேண்டிவரும். எனவேதான் சர்வதேச வானவியல் கழகம், 2006 இல் சிறப்பு மாநாட்டைக் கூட்டி, கோள்களைத் தவிர குள்ளக்கோள்கள் என்ற புதிய வகையை வகுத்தனர். புளூட்டோ உட்பட, சில வான் பொருட்களை இந்த வகைக்கு மாற்றினர். வௌவாலை பறவை இல்லை விலங்கு என்று மறுவகைப்படுத்துவதுபோலத்தான் இது!

## பதவி இழந்த புளூட்டோ!


புளூட்டோவைப்போல நிறை மற்றும் வடிவம் கொண்ட குள்ளக்கோள் மஹ்கி, மஹ்கி. புளூட்டோவின் பதவி போனதற்கு இதுவே முக்கிய காரணம். 309 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரிய னைச் சுற்றும் இதன் விட்டம் 1400 கிலோ மீட்டர்!







ஹவ்மேயா என்ற குள்ளக்கோள் தலை தெறிக்கும் வேகத்தில் தன்னைத் தானே சுற்றுகிறது. சுமார் 3.9 மணி நேரத்திற்கு ஒருமுறை சுற்றுவதால் அதன் நிலநடுக் கோட்டுப்பகுதி பெருத்து பார்ப்பதற்கு கோழி முட்டை போல தென்படுகிறது. குள்ளக்கோள் களில் அடர்த்தி மிகுந்தது. 283 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றும் இந்தக் குள்ளக்கோளுக்கு இரண்டு துணைக்கோள் கள் உள்ளன!



இதுவரை சர்வதேச வானவியல், கழகம் நமது சூரியக்குடும்பத்தில் புளூட்டோ, செரிஸ், ஹவ்மேயா, மஹ்கி மஹ்கி எரிஸ் ஆகிய ஐந்து குள்ளக்கோள்களை அங்கீ கரித்துள்ளது. சர்வதேச வானியல் கழகம் அங்கீகரித்துள்ள ஐந்து குள்ளக்கோள்களைத் தவிர செண்டா, சாலஸியா முதற்கொண்டு ஐந்து வான்பொருட்கள் கூடுதல் குள்ளக் கோள்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றன. சுமார் 300 குள்ளக்கோள்களை குயப்பர் வளையத்தில் கண்டுபிடிக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். குள்ளக் கோளாக இருக்கலாம் எனக் கருதப்படும் வான் பொருள் ஒன்றுக்கு வருணா என்கின்ற இந்தியப் புராணப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சுமார் 1000 கிலோ மீட்டர் விட்டம் உடைய இது, 283 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது!







## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1187 - சலாதின் ஜெருசலேம் மீதான தாக்குதலை ஆரம் பித்தான்.
- 1519 - பேர்டினணட் மகலன் 270 பேருடன் ஸ்பெயின் நாட்டின் சான்லூகர் டி பரமேடா என்ற இடத்தில் இருந்து உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார்.
- 1633 - சூரியனைப் பூமியைச் சுற்றுவதாகத் தெரிவித்த கலிலியோ கலிலி கத்தோலிக்க மதகுரு மாடத் தின் முன்னால் விசாரிக்கப்பட்டார்.
- 1697 - ஒன்பதாண்டுப் போரை (1688-1697) முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பிரான்ஸ், இங்கிலா ந்து, ஸ்பெயின், புனித ரோமப் பேரரசு டச்சுக் குடியரசு ஆகியவற்றிற்கிடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1847 - நீலப் பென்னி அஞ்சல் தலையை பிரித்தானியா மொரீசியசில் வெளியிட்டது.
- 1854 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படையினர் கிறிமியாவில் இடம்பெற்ற போரில் ரஷ்யர்க ளைத் தோற்கடித்தனர்.
- 1857 - கிழக்கிந்தியக் கம்பனிக்கு விசுவாசமான படை கள் டெல்லியைக் கைப்பற்றினர். சிப்பாய் எழுச்சி முடிவுக்கு வந்தது.
- 1878 - த ஹிண்டு இதழ் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - மகாத்மா காந்தி பூனே சிறையில் உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.
- 1945 - மகாத்மா காந்தியும் ஜவகர்லால் நேருவும் பிரித் தானியப் படைகளை வெளியேறக் கோரினர்.
- 1966 - சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.
- 1979 - மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இரா ணுவப் புரட்சியை அடுத்து பேரரசன் முதலாம் பொக்காசா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1990 - தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.
- 1993 - துருவ செயற்கைக்கோள் ஏவுகணையை இந்தியா ஏவியது.

### பிறப்புகள்

- 1924 - அ. நாகேஸ்வர ராவ், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (இ. 2014)

### இறப்புகள்

- 1933 - அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர் (பி. 1847)
- 1971 - ஜியோர்கஸ் செபெரிஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1900)
- 1975 - சென் ஜோன் பேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1996 - பால் எர்டோசு, அங்கேரிநாட்டுக் கணிதவியலா ளர் (பி. 1913))

அன்பு வாசகர்களே!
சிறுவர் பகுதிக்கு உங்கள் அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் அபிப்பிராயங்களை
ஆசிரியர், சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல.03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

## என்னைப்போலவே ஆடுகிறார்! பிராட்மென் புகழாரம்

..70

..போட்டி டிராவில் முடிந்தது. மூன்றாவது இறுதிப்போட்டி டிரெண்ட் பிரிட்ஜில் நடந்தது. கங்குலி மீண்டும் 136 ரன்கள் குவித்தார். சச்சின் முதல் இன்னிங்சில் 177 ரன்களும், இரண்டாவது இன்னிங்சில் 74 ரன்களும் அடிக்க மைதானமே ரணகளமானது. இருப்பினும் இந்தப் போட்டியும் டிராவில் முடிய இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியின் தொடக்கத்தில் அசார் கையில் காயம்பட விளையாட முடியாமல் அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். ஆக, துணைக்கேப்டன் என்ற முறையில் சச்சினே அணிக்குத் தலைமை ஏற்றார். இது குறித்து டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில் சச்சின் எழுதியதாவது: இந்தியா 500 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தவுடன் இங்கிலாந்து ஆடத்துவங்கியது. இங்கிலாந்திற்கு நெருக்கடி கொடுத்து அவர்களை ஆட்டம் இழக்கச் செய்ய வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பு. ஆனால், உள்ளூர எனக்கிருந்த பயம் என்னவென்றால் இங்கிலாந்து விரைவில் ஆட்டம் இழந்து அதிகபட்சம் 350- 400 ரன்கள் எடுத்துவிட்டால் மீண்டும் இந்தியா ஆட வேண்டிய நிலைமை. அப்போதைய இந்திய அணியில் பேட்ஸ்மேன்களுக்கு கடும் பஞ்சம். ரதோர் மற்றும் அசாரால் ஆட முடியாது. மஞ்சுரேகர் மற்றும் மோங்கியா ஃபாமில் இல்லை. கங்குலி மற்றும் டிராவிட் புதுமுகங்கள். இவர்களை வைத்துக் கொண்டு ரன்களை எப்படிக் குவிக்க முடியும். எனவே, இங்கிலாந்து வீரர்களை ஆடவிட்டால் அவர்களும் ரன் குவிப்பார்கள். ஆக இறுதியில் ஆட்டம் டிராவில் முடிந்துவிடும். இல்லை என்றால் இரண்டாவது இன்னிங்சில் நாங்கள் மோசமாக விளையாட இங்கிலாந்து வெற்றி பெற்று 2-0 என்று தொடரைக் கைப்பற்றும்.



ஆக, தோல்வியைத் தவிர்க்க எனக்கு தெரிந்தது ஒரே வழி இதுதான். ஆட்டம் டிராவில் முடிந்தாலும் பலருக்கு என் செய்கை புரியவில்லை. அப்போது தான் கேப்டனாக இருப்பது எவ்வளவு பெரிய கஷ்டமான பொறுப்பு என்பதை உணர்ந்தேன். இரண்டு நாள் கேப்டன் பொறுப்பிற்கே இவ்வளவு தலைவலி என்றால் அசாருக்குப் பிறகு என்னை முழுநேரக் கேப்டனாகப் பொறுப்பேற்கச் சொன்னால் என்ன செய்வது என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன் என்று எழுதியுள்ளார். ஆனால், சச்சின் எதிர்பார்த்தது போலவே கேப்டன் பொறுப்பு அவரை வெகு விரைவிலேயே தேடி வந்தது. சச்சினின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கிரிக்கெட் வாரியம் கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு கண் கொத்திப் பாம்பாக உன்னிப்பாகக் கவனித்து வந்தது. எல்லோரையும் விட சச்சினுக்கு இருக்கும் ப்ளஸ் பாயிண்ட் தான்மட்டும் நன்றாக விளையாடி தனிப்பட்ட சாதனைகளைக் குவிக்க வேண்டும் என்று அவர் எண்ணுவதில்லை. தனது அணியில் இருக்கும் அனைவரும் நன்றாக விளையாட வேண்டும் என்று அவர் விரும்புவார். சச்சினின் இந்த அணுகுமுறைதான் வாரியத்தைக் கவர்ந்தது என்று சொல்லலாம். எதிரணி ஆடும் போது வீரர்கள் எங்கெங்கு நிற்க வேண்டும் என்ற ஆலோசனை கூறுவது. இக்கட்டான நேரங்களில் தானே பௌலிங் செய்வது என முழு வீச்சில் தன்னை அணியுடன் ஐக்கியப்படுத்திக்கொண்டார் சச்சின். ஆக, ஏழு ஆண்டுகள் கேப்டன் பொறுப்பிலிருந்த அசார் நீக்கப்பட்டு சச்சினுக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது.

8 ஆகஸ்ட் 1996 இல் சச்சின் கேப்டனாக மகுடம் சூட்டப்பட்டார். அப்போது சச்சினின் வயது 23 ஆண்டுகள் 4 மாதங்கள். ஃபாஸ்ட் ஃபுட் மாதிரி கிரிக்கெட் வாழ்க்கையில் சச்சினுக்கு எல்லாமே ஃபாஸ்ட்தான். 15 வயதில் ரஞ்சி ஆடத் துவங்கியதிலிருந்து 23 வயதில் டெஸ்ட் கேப்டன் ஆகும் வரை சச்சினுக்கு நடந்தது எல்லாமே ராக்கெட் வேகத்தில்தான்.

**கிரிக்கெட் பீஷ்மர் என்று அழைக்கப்படும் டான் பிராட்மென் அவர்களால் ரசிக்கப்பட்ட வீரர் நமது சச்சின். சச்சினைப்பற்றி அவர் கூறிய கமெண்ட் சச்சின் என்னைப்போலவே ஆடுகிறார் என்பதுதான். இதைவிட சச்சினுக்கு வேறு என்ன புகழுரை வேண்டும். வசிஷ்டர் வாயால் பெற்ற பிரம்மரிஷி பட்டம் அல்லவா இது!**

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

**அனாஹத சக்கரம்**

**மஹா மந்திர தியானம்**

இந்தச் சக்கரம் இதயப் பகுதியில் இருக்கிறது. சமஸ்கிருதத்தில், அனாஹத என்றால் உருவாக்க முடியாதது என்று பொருள்.

மற்றவர்களின் கவனத்திற்காகவும் அன்பிற்காகவும் ஏங்கும் பொழுது இந்தச் சக்கரமானது பூட்டப்படுகிறது. (அடைபடுகிறது)

சுயநலமற்ற அன்பை வெளிப்படுத்துவதன் மூலம் இந்தச் சக்கரத்தை மலரச் செய்யலாம்!

தியான முறை: மஹா மந்திர தியானம்- திபெத்திய புத்த மதத்திலிருந்து எடுக்கப்பட்டது.

அனாஹத சக்கரமானது அன்பு, தனி மனித நம்பிக்கைகள் மற்றும் அதைப் போன்ற உணர்ச்சிகள் தொடர்புடையது.



நமது அன்பை வெளிப்படுத்தாமல், தொடர்ந்து மற்றவர்களின் கவனத்திற்காக ஏங்கிக் கொண்டிருப்பதனால் இந்தச் சக்கரமானது பூட்டப்படுகிறது. அதன் பொருள் உருவாக்க முடியாதது என்பதாகும். அது குறிப்பது உண்மையான அன்பு வெளியிலிருந்து உருவாக்கப்பட முடியாதது; இது உங்களுக்குள் நிகழ வேண்டும்; உங்களுக்குள் ஒரு ஆழமான விழிப்புணர்வு ஏற்படும் பொழுதுதான் அது நிகழ்கிறது.

உண்மையான அன்பு நிகழும் பொழுது, நாம் மற்றவர்களின் கவனத்திற்காக ஏங்குவதை விட்டுவிட்டு நாமே ஒரு சக்தி மூலமாகிவிடுகிறோம்.

**கவனத்திற்காக ஏங்குதல் என்றால் என்ன?**

பாருங்கள்; நாம் எதைச் செய்தாலும் எதை எண்ணினாலும் நம்மைச் சுற்றியுள்ள மக்களின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் நமது உள்மனதிலிருந்து சில நுட்பமான வழிகளில் எதிர்பார்க்கிறோம். நாம் அனைவரிடமும் நற்பெயரைச் சம்பாதிப்பதில் மிகத் தீவிரமாக இருக்கிறோம். இதை வெளிப்படையாகச் செய்யாமல் இருக்கலாம். ஆனால், ஆழ்ந்து ஆராய்வோமாயின் நாம் நம்மைச் சூழ்ந்துள்ள மக்களின் பாராட்டுதல்களும் அங்கீகாரமும் இல்லாமல் அமைதியடைவதில்லை. இந்த அங்கீகாரத்தையும் அனுமதியையுமே நாம் கவனத் தேவை என்கிறோம்.

ஆன்மீகம் 23

80 சதவீதம் பிரச்சினைகளுக்குக் காரணம் இந்த கவனம் அல்லது அங்கீகாரத்தைக் கோருதலே. சாதாரணமாக அமர்ந்து குறிப்பெடுத்துப் பார்த்தால், நாம் ஒரு நல்ல பெயரை வாங்கவும் நமது புகழை நிலைநிறுத்திக் கொள்ளவும் ஒரு நாளில் எத்தனை விடயங்களை செய்கிறோம் என்பது தெரியும்.

நீங்கள் 24 மணிநேரமும் வாழ்நாள் முழுவதும், மற்றவர்களின் அங்கீகாரத்தைப்பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு கொள்வீர்கள். வாழ்நாள் முழுவதும் குடும்பத்தினரிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் அங்கீகாரக் கையெழுத்தைப் பெறுவதற்கு ஒரு கையெழுத்து வேட்டையே நடத்திக்கொண்டிருக்கிறோம்.

உங்களது எல்லாச்செயல்களும் எல்லா முயற்சிகளும் உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களின் கையெழுத்தைப் பெறுவதற்காகவே அமைகிறது.

பரமஹம்ஸ சுவாமி (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -18

## பிள்ளைக்கற்றாழையின் மகத்துவம்-சூழலுக்கிணைவான எளிமைத் தொழில்நுட்பம் இங்குமிருக்கின்றது!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எங்களூரில் உள்ள வளங்களைப்பற்றியும் அது சார்ந்த சூழலைப்பற்றியும் நாம் கரிசனை கொள்ளும் நேரமிது. இப்பிரதேசத்தில் வாழும் துன்பப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க பலவழிகளில் செயலிலிறங்க வேண்டியிருக்கின்றது. பலவற்றையும் இழந்து நிர்க்கதியாகியிருக்கும் எம்மவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேணடிய தருணமிது. இலவசமாக கொடுப்பதை மாற்றி தமக்கான உணவை உற்பத்தி செய்யவும் தமக்குரிய வருமானத்தை தேடிக்கொள்ளவும் நாம் வழிகாட்ட வேண்டும். பலரும் பலவழிகளில் முனைந்தும் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னும் வறுமைக்கோட்டில் உழலும் மக்களின் வாழ்வாதாரத்தை எதிர்பார்த்த அளவில் முன்னேற்ற முடியவில்லை. இன்னும் இது பற்றி அலசியாராய்ந்து நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வாழ்வாதார திட்டங்கள் பலகோணங்களில் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டிருப்பினும் அவற்றின் பெறுபேறுகளை நிலைபேறானதாக காண முடியவில்லை. இவற்றிற்கு திட்டங்களை வகுப்பவர்களோ அல்லது நிறைவேற்றுபவர்களோ மட்டும் காரணமாயிருக்க முடியாது. மாறாக மக்களின் ஒத்துழைப்பும் அதில் காட்டும் கரிசனையும் அவர்களுக்கான வருமானத்தை அதிகரித்தலில் மக்களின் உழைப்பும் சேர்ந்து காரணங்களாக அமைகின்றன. மக்களை தமக்குரிய உணவின் கணிசமான பங்கை தாமாக உற்பத்தி செய்ய ஊக்குவித்தல் ஒரு வழி. அதனுடன் பெண்களை குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வசதி வாய்ப்புக்களை இன்னும் பெருக்கிக்கொள்ள வழிசெய்து கொடுக்கவேண்டும்.

### பிள்ளைக்கற்றாழைத் தொழில் நுட்பம்

பிள்ளைக்கற்றாழைக்குரிய மருத்துவ குணங்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் நம்மூரில் இதற்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் எதிர்பார்த்தளவில் இல்லை. மணற்பாங்கான மண்ணில் சிறப்பாக வளரும் இம்மருத்துவ மூலிகையை வளர்தெடுத்து பாரியளவில் பயன்படுத்த ஆவனசெய்ய வேண்டும். தொழிற்றுறை விருத்தியடைய முனையும் இவ்வேளையில் இவ்வாறான மூலிகைளின் பயன்பா



**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XI**

டமை ஆய்வு மூலம் கண்டறிந்து அதனை விருத்திசெய்தல் முக்கியமானதாகும். அதற்கான அடித்தளம் விரிவுரையாளர்களின்ாலும் விவசாய விஞ்ஞானம் கற்கும் மாணவர்களின் ஆய்வின் மூலமாகவும் இடப்பட்டுள்ளது.

பிள்ளைக்கற்றாழ்யைப் பற்றிய ஆய்வு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விவசாய உயிரியல் துறையின் இறுதியாண்டு மாணவி செல்வி நிவேதிகாவினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. மிகவும் பெறுமதியான இவ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட முடிபுகளை எம்மினிய உறவுகளுக்கு சுருக்கமாக தர முனைந்துள்ளேன்.

மக்களிடையே அறிவினை வளர்தெடுக்கவும் புதிய விடயங்களை அவர்களுக்கு தெரியப்படுத்தலும் இதன் நோக்கமாகும். ஆய்வினை விஞ்ஞான சஞ்சிகைகளில் மட்டும் பதிவேற்றுவதை மட்டும் குறிக்கோளாக இல்லாது அது எமது மக்களின் வாழ்வியலுக்கும் தொழில் முனைப்பிற்கும் உதவவேண்டும் என்பதுவுமே எமது குறிக்கோளாகும்.

பிள்ளைக்கற்றாழைக்கு பல அதிசய குணங்களுண்டு. இதனது இலையிலிருந்து பெறப்படும் ஒரு வகையான ஜெல் அல்லது சளி போன்ற பொருள் உணவாக உட்கொள்ளக்கூடியது. சற்று கசப்பான சுவையை ஏற்படுத்தினாலும் இந்த ஜெல்லின் பயன்பாடு அளப்பரியது. மருத்துவத்துறையில் பல தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் இதனை சுத்தமாக பிரித்தெடுத்தால் வேறு தேவைகட்கும் பயன்படுத்தலாம். இதனது பயன்பாடு பூஞ்சண கொல்லியாகவும் இன்னும் பழங்களுக்கு மேல் பூசினால் பழங்களினது பழுக்கும் காலத்தை பிற்போடவும் அதாவது பழங்களை சேமிப்பில் வைத்திருக்கும் காலத்தை அதிகரிக்கும் தன்மையை கொண்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மாம்பழம், வாழைப்பழம் மற்றும் பப்பாசி பழங்களுக்கு இதனை தோலில் விசிறுவதன் மூலம் பழுக்கும் காலத்தை நீட்டலாம் என்பதாகும். வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் அப்பிள் பழங்களுக்கு உண்ணக்கூடிய மெழுகு பூசுவது போல இங்கும் உணவாக உட்கொள்ளக்கூடிய பிள்ளைக் கற்றாழையின் ஜெல்லினை பயன்படுத்தலாம் என்பது அந்த கண்டுபிடிப்பு. இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு செய்யப்பட்ட ஆய்வின் முடிபு ஆச்சரியம் தருவதாகவும் நம்பிக்கை தருவதாகவும் இருப்பதனால் இவ்வாய்வினை மேலும் விருத்தி செய்து பழங்களில் ஜெல்லை பூசுவதால் ஏற்படும் மாற்றங்களையும் துல்லியமாக அளவிட்டு இதன் பயன் பாட்டை தொழிற்றுறையில் பயன் படுத்த விருத்திசெய்ய வேண்டும்.

சந்தையில் பழங்களை விற்பனைக்கு வைத்திருப்பவர்களுக்கு கைகொடுக்கும் இவ்வாய்வின் பெறுமதியை உணர்ந்து இதனை ஒரு மூலப்பொருளாக பயன்படுத்த வழி செய்து கொடுக்க வேண்டும். எமது பிரதேசத்தின் வளத்தை பயன்படுத்தி மூலதனமாக கொண்டு செய்யப்படும் இவ்வகை ஆய்வுகள் வருங்காலத்தில் எமது வளங்களின் பயன்பாட்டை உயர்த்த நிச்சயமாக பயன்படும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு. வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்புடைய இவ்வகையான ஆய்வுகள் மாணவர்களினால் செய்யப்பட்டு மக்களுக்கு தெரியப்படுத்துவது முக்கியமானதாகும். அந்த வகையில் இவ்வாய்வுகளை மாணவர்கள் செய்ய முன்வந்ததும் அதனால் அவர்கள் பட்ட இடர்களுக்கு இறுதியில் பெறப்பட்ட அனுகூலமான முடிவுகளும்இவ்ஆய்வுகளை மேலும் முன்னெடுத்து செல்ல உந்துதலாக இருக்கும்.

பிள்ளைக்கற்றாழை மணற்பாங்கான இடத்தில் சிறப்பாக வளரும் தன்மையுடைய மூலிகைத்தாவரமாகும். பிள்ளைக்கற்றாழையின் வேர்தொகுதியிலிருக்கும் வேருக்கும் பூஞ்சணத்திற்குமான ஒன்றிய வாழ்வு இத்தாவரம் மணல் மண்ணில் சிறந்து வாழ வழி செய்கின்றது. கரையோர பிரதேசத்தில் இதனை அதிகளவில் வளர்த்தால் அதன் மூலம் இவற்றினுடைய பயன்பாட்டை கரையோர பகுதிவாழ் மக்களும் அனுபவிக்க இடமுண்டு. அதனுடன் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும் வாய்ப்புண்டல்லவா. சுதேச மருத்துவத்துறையில் இதனது பயன்பாட்டின் வளர்ச்சியையும் உள்ளார்ந்து பிள்ளைக்கற்றாழையின் பயன்பாட்டை முழுவதுமாக வெளிக்கொணர நாம் அனைவரும் முயற்சிப்போமாக. பிள்ளைக் கற்றாழையின் ஜெல்லின் பயன்பாடு குறிப்பாக பழங்களை வைத்திருக்கும் காலத்தை அதிகரிக்க உதவுவது இன்னுமொரு சூழலுக்கியையவான தொழில் நுட்பமாகும். எடுத்துச்சொல்லவேண்டியது எமது கடமையாகும் செய்து பார்ப்பதும் அதனை பயன்படுத்த முனைவதும் உங்களைச் சார்ந்தது. முயற்சி திருவினையாக்கும் என்பதனை மீண்டும் ஒருமுறை மெய்ப்பிக்க இதுவொரு இன்னுமொரு கண்டுபிடிப்பு.

**சிறுவன் கடத்தல் விவகாரம்**

## தாய்க்கு பிணை,தந்தை உட்பட 16 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஒரு கோடி ரூபாய் கப்பம் கோரி, நான்கு வயது சிறுவன் கடத்தப்பட்டதற்கு பின்னர் இடம்பெற்ற சம்பவத்துக்காக சிறுவனின் தாய் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் தந்தை உட்பட 16 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கல்கமுவை நீதவான் நீதிமன்றத்தினாலேயே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பிரசன்னமாய் இருந்த சட்டத்தரணிகளின் வாகனங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்களுக்கு மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒருகோடி ரூபாய் கப்பம் கோரி, அநுராதபுரம், மீகலேவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராதலான பிரதேசத்தில் தந்தை மற்றும் தாயை தாக்கிவிட்டு அவர்களுடைய நான்கு வயது மகனான தமிந்து யஷின் ஏக்கநாயக்க ஜூலை 28ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கடத்தப்பட்டார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேரே வீட்டிலிருந்த பெற்றோரை தாக்கிவிட்டு அவர்களுடைய நான்கு வயது மகனை கடத்திச் சென்றனர்.

இந்நிலையில் மேற்படி வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகளின் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றே இந்த 17 பேருக்கும் எதிராக குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

சிறுவனின் தாயை ஐந்து இலட்சம் ரூபாய் சரீர பிணையிலும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணையிலும் விடுவித்து நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, சிறுவன் கடத்தல் விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவரையும் கல்கமுவ நீதவான் நீதிமன்றத்தில் 17 ஆம் திகதி புதன்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் டீ.எம் ருவன் தம்மிக்க, ஐவரின் விளக்கமறியலை ஒக்டோபர் முதலாம் ஆம் திகதி வரையிலும் நீடித்து உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சிறுமியை படுகொலை செய்த சந்தேகநபர் ஆற்றினில் குதித்து திடீரென தற்கொலை!

(கொழும்பு)

மட்டக்களப்பில் ஹக்மீன பிரதேசத்தில் ஹயந்தி லங்காதிலக்க என்ற எட்டுவயது சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திபடுகொலைச் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மாதொலே ஆற்றில் மூழ்கிப் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இந்த நபர், ஆடைகள் சிலவற்றை அடையாளம் காண்பிப்பதற்காக பொலிஸாருடன் சென்றவேளையிலேயே பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பி ஆற்றில் குதித்து பலியாகியுள்ளார்.

அவரை காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்த பொலிஸார் இருவரும், தண்ணீரை அளவுக்கு அதிகமாக பருகியமையால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்புட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ மோப்பநாயான ரோணி, சந்தேக நபரின் கட்டில் வரையும் சென்றதாக பொலிஸார் பெருமிதத்துடன் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசின் ஆட்சிக்குள் வட.-கிழக்கு மாகாணங்கள்

## குணதாச அமரசேகர வலியுறுத்தல்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆட்சி அதிகாரத்தை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் பிழையான தீர்மானங்களை எடுத்து பிழையான பாதையில் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டை பிளவுபடுத்தும் யோசனைத் திட்டமொன்றை எதிர்வரும் ஆண்டு ஆரம்பத்தில் முன்வைக்க உள்ளதாகவும்,இதற்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் வீதியில் இறங்கிப் போராடப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான அச்சுறுத்தல்களின் போது அரசாங்கம் மதிநுட்பத்துடன் தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை கலைத்து, அதன் அதிகாரத்தை அரசாங்கத்தின் கீழ் கொணடு வர வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ)

# இலங்கை அரசாங்கத்தை கண்டித்து இந்திய மீனவர்கள் உண்ணாவிரதம்

## 2000 மீனவர்கள் பங்கேற்பு



இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து தமிழக நாகை மாவட்ட பூமபுகார் மீனவர்கள் நேற்று முன்தினம் முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பூம்புகார் புதுகுப்பம், வானகிரி பகுதியை சேர்ந்த 23 மீனவர்கள் கடந்த 10 ஆம் திகதி கோடியக்கரை அருகே ஒரு விசைப்படகு மற்றும் 3 பைபர் படகுகளில் மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் விசைப்படகு மற்றும் பைபர் படகில் இருந்து மீன்பிடித்த 21 மீனவர்களை கைது செய்து விசைப்படகில் இலங்கைக்கு கொண்டு சென்றுவிட்டனர். 2 மீனவர்கள் மட்டும் கடலில் குதித்து தப்பி சென்று விட்டனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து பூம்புகார் பகுதி மீனவர்கள் மீன் பிடிக்க செல்லாமல் வேலை நிறுத்த போராட்டம் நடத்தி வந்தனர்.


100 விசைப்படகு, 500 பைபர் படகுகளில் மீன்பிடிக்க செல்லும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாததால் மீனவர்களுக்கு தினமும் பல இலட்சம் வருமான இழப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் பூம்புகார் உட்பட 64 மீனவ கிராம மக்கள் நேற்று முன்தினம் முதல் குடும்பத்தினருடன் காலவரையறையற்ற உண்ணாவிரதம் தொடங்கி உள்ளனர்.

இலங்கை அரசை கண்டித்தும், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்து படகுகளை திருப்பி வழங்க கோரியும் இந்த போராட்டம் நடைபெறுகிறது. இதில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இனவாத கோரிக்கைகளினை அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது

## தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இனவாத கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என தேசப்பற்றுடைய தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிரசுக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டை பிளவுபடுத்தும் எந்தவொரு யோசனைத் திட்டத்திற்கும் அங்கீகாரம் வழங்கக் கூடாது எனவும், இது அரசியல் சாசனத்தின் 6 ஆம் இலக்க சட்டத்திற்கு புறம்பானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனவாதிகள் நாட்டில் மீண்டும் இனவாத யுத்தமொன்றை முன்னெடுக்க முயற்சித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ் இனவாதிகளின் யோசனைத் திட்டத்திற்கு தற்போதைய அரசியல் சாசனத்தில் இடமிருந்தால், அரசியல் சாசனத்தையே மாற்றியமைக்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 13 ஆம் திருத்தச் சட்டத்தை அரசாங்கம் இரத்து செய்ய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## இரட்டைக் குழந்தைகள்

சிலருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறப்பதுண்டு அல்லவா? அதில் மூன்று வகை உண்டு.

முதல்வகை : ஒற்றுமையுடைய இரட்டைக் குழந்தைகள். ஆணின் உயிரணுவும் பெண்ணின் உயிரணுவும் சேர்ந்து உருவாகும் கரு சாதாரணமாக வளர்ந்து பிறக்கும் போது ஒரு குழந்தையாக பிறக்கும்.

சில சமயம் இது வளரும் போது இரண்டாகப் பிரிந்து வளர்ந்தால் ஒரே மாதிரியான இரண்டு குழந்தைகள் பிறக்கும்.

இப்படி பிறப்பது இரண்டும் ஆணாக இருக்கும். அல்லது இரண்டும் பெண்ணாக இருக்கும். அபூர்வமாக சில சமயம் தாயின் இரண்டு உயிரணுக்கள் தந்தையின் இரண்டு உயிரணுக்கள் தனித்தனியாக சேர்ந்து இரண்டு கருக்கள் உருவாகி வளர்ந்து பிறப்பதும் உண்டு. இப்படி பிறக்கும் போது ஒன்று ஆணாகவும் இன்னொன்று பெண்ணாகவும் கூட இருக்கலாம்.

மூன்றாவது வகை : மிக மிக அபூர்வம். உடல் இரண்டும் ஒட்டிக் கொண்டே பிறப்பது. சயாமிய இரட்டையர்கள் என்பது இதற்குப் பெயர் (Siamese Twins)

பொதுவாக இரட்டைக் குழந்தைகளாக பிறப்பவர்கள் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்வது அபூர்வம். அதுவும் சின்ன வயதிலிருந்து பிரிந்து விடுபவர்கள் மிகவும் குறைவு. அப்படி பிரிந்து வேறு வேறு இடங்களில் வாழ்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார் தோமஸ் பூச்சார்ட் என்ற பேராசிரியர். மின்ன சோட்டா பல்கலைக்கழகத்தின் உளவியல் துறைத் தலைவரான அவர், ஒன்றாக பிறந்து, ஒருவரை ஒருவர் பார்க் காமல் வெவ்வேறு இடங்களில் பிரிந்து வாழும் இரட்டையர் களைக் கண்டு பிடித்தார். அவர்களை எல்லாம் ஒரே இடத்துக்கு வரவழைத்தார்.

ஆராய்ச்சிக்குச் சம்மதித்த இரட்டையர்களை மின்ன சோட்டா பல்கலைக்கழகம் பணம் கொடுத்து கூப்பிட்டது. ஆறு நாட்கள் அவர்களெல்லாம் விருந்தாளியாக தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய குணநலன்கள், நடை, உடை, பாவனைகள், பழக்க வழக்கங்கள், உடம்பில் உள்ள நோய்கள், பொழுது போக்குகள், நண்பர்கள், மத நம்பிக்கை...

இது சம்பந்தமாக 15 ஆயிரம் கேள்விகள் கேட்டு, கிடைத்த விபரங்களை கணனியில் கொடுத்து விபரங்களை தெரிந்து கொண்டார்கள். அப்பொழுது தான் சில ஆச்சரியமான உண்மைகள் தெரிய வந்ததாம். ஜரீன்மில்லர், ஆன் சிங்கர் என்ற இரண்டு பெண்களும் இரட்டையர்கள். பிறந்தவுடன் பிரிந்து விட்டார்கள். 60 வருடமாக ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

அப்படி இருந்தும் என்ன ஒரு ஆச்சரியம் தெரியுமா? இவர்கள் இருவரும் சந்திப்பதற்கு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தபோது... இரண்டு பேரும் ஒரே மாதிரியான பரிசுப் பொருளையே வாங்கிக்கொண்டு வந்தார்களாம்! ஒரே மாதிரி வேலைப்பாடுடைய தட்டுகளைக் கொண்டு வந்திருந்தார்களாம்.

ஆஸ்கர் ஸ்டோகர், ஜாக்யூக என்ற இரட்டையர்கள் பிறந்தவுடன் பிரிந்து விட்டார்கள். ஜேர்மனியில் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவராகி ஆஸ்கர் வளர்த்து வந்தார். தென் அமெரிக்காவுக்குப் பக்கத்திலுள்ள டிரினிடாட் நாட்டில் ஒரு யூதமதக் குடும்பத்தில் ஜாஸ்யூக் வளர்க்கப்பட்டார்.

இவர்கள் இரண்ட பேரும் சந்திக்க ஏற்பாடு செய்த போது இருவரும் ஒரே மாதிரியான கண்ணாடி போட்டிருந்தார்களாம். ஒரே மாதிரி உடை அணிந்திருந்தார்களாம். அதுமட்டுமல்ல... இருவரும் ஒரே மாதிரியான மீசை வைத்திருந்தார்களாம்.

அமெரிக்க இரட்டையர்களான டோனி மிலாய், ரோஜர்புரூக் சிறிய வயதிலேயே இவர்களை இரண்டு வெவ்வேறு குடும்பங்கள் சுவீகாரம் எடுத்துக் கொண்டன.

இவர்கள் சந்தித்த போது ஒரு ஆச்சரியம். இரண்டு பேரின் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, ஒரே மாதிரியான ஷேவிங் கிறீம். ஒரே மாதிரி பெயர் ஒயில் இருந்ததாம். இருவரும் சுவீடனிலிருந்து இறக்குமதியாகும் ஒரே வகை பற்பசையை வைத்திருந்தார்களாம்.

ஜிம் ஸ்பிசிங்கர், ஜிம் லூயிஸ் என்ற இரட்டையர்கள் 39 வயது வரை ஒருவரை ஒருவர் பார்க்காமல் வளர்ந்தவர்கள். இவர் கள் இருவருமே கை நகங்களை கடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். கார் ரேஸ் பந்தயத்தில் விருப்பம் உள்ளவர்கள். புகை பிடிப்பவர்கள். ஒரே மாதிரியான கார் வைத்திருந்தார்களாம்.

இரட்டையர்களை ஆராய்ச்சி செய்த பேராசிரியர் என்ன சொல்கிறார் தெரியுமா? நம்முடைய குண நலன்களில் ஒரு சிறிய பகுதியை – ஆனால் முக்கியமான பகுதியை – பெற்றோர்களிடமிருந்து நாம் பெற்ற மரபணுக்கள் (Genes) தான் முடிவு செய்கின்றன. இதைப் புறக்கணிக்க முடியாது.

ஆனால் நாம் மரபணுக்களின் '**கைதிகள்**' அல்ல. நாம் வளரும் சூழ்நிலையும் நம்மை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது என்பது அவரது முடிவு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியில் சில வெற்றிகள்!

வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்று ஒரு வருடமாகிறது. கடந்த வருடம் செப்ரெம்பர் 21ஆம் திகதி வடக்கிலுள்ள தமிழ் மக்கள் தமது வாக்குகளை பெரும் அர்ப்பணிப்போடு அளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைத்தனர். அதனூடு, தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்குமான உரத்த செய்தியைச் சொல்லியிருந்தார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு மாகாண சபைகளினூடு தீர்வைக் கண்டுவிட முடியாது என்று தமிழ் மக்களும் அரசியல் தலைமைகளும் நிராகரி த்து கால்நூற்றாண்டைக் கடந்த நிலையிலேயே வட மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது.

ஏற்கெனவே, "இது தீர்வில்லை" என்று நிராகரித்த மாகாண சபை முறைமைக்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பரிப்போடு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற கேள்வி தென்னிலங்கையிலிருநதோ, இந்தியாவிலிருந்தோ அல்லது வேறொரு சர்வதேச நாடொன்றிடமோ எழுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால், அந்தக் கேள்விக்கான பதில்கள், "இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தமிழ் மக்களின் மன நிலை, தமிழ் தேசியத்தை நிலை நாட்டுவதற்கான ஒருமித்த ஆதரவு, ஆயுதப் போராட்டங்கள் தோற்ற நிலையில், தமது விடுதலை குறித்து சிந்திக்கும் தமிழ் மக்கள் தேர்தெடுத்த மிதவாத போராட்ட வடிவம் வாக்களிப்பு" என்பதாகவே இருக்கின்றன.

இதுதான், குறிப்பிட்டளவு நெருக்கமான பதில்கள். மற்றப்படி, எந்தவொரு தருணத்திலும் அது, நாட்டைப் பிரிப்பதற்கான ஆயுத போராட்டங்களை முன்னெடுப்பதற்கான அறிகுறியாக வெளிப்படவில்லை.

அதற்கு வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் இப்போதைக்கு தயாரும் இல்லை. அது, அவசியமும் இல்லை.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வைக் காணுவதற்கு அல்லது அதிகாரங்களைக் கோரும் முயற்சிகளின் ஒரு கட்டமாக மாகாண சபைத் தேர்தலை கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தள்ளப்பட்டது.

ஏனெனில், 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு பின்னர் தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் தமது போராட்ட வடிவத்தை புதிய தளத்தில் முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதனை, காலம் தாழ்த்திச் செய்யவும் முடியாது. அதற்குள் இலங்கை அரசாங்கமும், அதன் சார்ப்பு சக்திகளும் வடக்கை இன்னமும் இலக்கு வைத்து குடியேற்றங்களையும், அபகரிப்புக்களையும் செய்துவிடும் என்ற விடயம் மேலெழுந்து நின்றது.

ஏற்கெனவே கிழக்கை கிட்டத்தட்ட முற்றுமுழுதாக இழந்து நிற்கின்ற தமிழ்த் தேசியத்திற்கு வடக்கையாவது காப்பாற்ற வேண்டிய (துக்கவைக்க) தேவை இருந்தது. அதுதான், வடக்கு மாகாண சபைத் தேர்தலை போராட்டத்தின் ஒரு வடிவமாக தேர்ந்தெடுக்க காரணமாகவும் அமைந்தது.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து அதன் மிதவாதப்போக்கு (அரசியல் நிலைப்பாடுகள்) பிடிக்காமல் அதிலிருந்து விலகியவர்கள் தோற்றுவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வட மாகாண சபைத் தேர்தலை புறக்கணிப்பது தொடர்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் மறுதலிக்க முடியாதவை.

அந்தக்கருத்துக்களில் இன்னமும் வலு இருக்கின்றது. அதாவது, 13ஆவது திருத்த சட்ட நகல் வரைபுகள் வெளியாகிய தருணத்திலேயே தமிழ் அரசியல் தலைமைகள அதனை முற்றுமுழுதாக நிராகரித்திருந்தன.

அப்படி ஏற்கெனவே நிகாரித்த ஒன்றுக்காக ஏன் இவ்வளவு அர்ப்பணிப்போடு இருக்க வேண்டும். அல்லது இந்தியாவின் அதிக கையாளுகைக்குள் ஏன் தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் செல்ல வேண்டும் என்பதாகவே இருந்தது. இந்தக் கருத்துக்கள் மிகவும் நியாயம் பொருந்தியவைதான்.

ஆனால், கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பவனுக்கு சிறு மரக்கட்டையைப் பற்றுவதற்கான வாய்ப்பு போலவே வட மாகாண சபைத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் அமைந்தது.

அதைப் பற்றிய நிலையில், தத்தளிப்பவன் தன்னைக் கொஞ்சம் ஆசுவசப்படுத்திக் கொண்டு கரையேறுவதற்கு தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள அல்லது அந்த முயற்சிகளை இன்னும் வேகத்தோடு முன்னெடுக்க முடியும் என்று நம்புவதாகவே அமைந்திருந்தது.

ஆக, மாகாண சபைத் தேர்தல் என்பது பெருங்கடலில் தத்தளித்தவனுக்கான சிறு மரக்கட்டை அவ்வளவுதான். அது, ஓடமோ, படகோ அல்ல.

வட மாகாண சபைத் தேர்தல் கொடுத்த தெம்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தன்னுடைய நடவடிக்கைகளின் மேல் கொஞ்சம் நம்பிக்கை கொள்ள வைத்தது. அல்லது, இலங்கை அரசாங்கத்தை கையாளுவது தொடர்பில் இன்னமும் மூர்க்கம் கொள்ளவைத்தது. இதுதான் உண்மை.

ஏனெனில், இறுதி மோதல்கள் முடிவடைந்த நிலையில், இலங்கை அரசாங்கத்துக்கு முன்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்வது என்று தெரியாமல் அல்லாடிக் கொண்டிருந்தது.

இன்றைக்கு, இலங்கை அரசாங்கத்தை எரிச்சற்படுத்துமளவுக்கு தன்னுடைய செயற்பாடுகளையும், கருத்து முன்வைப்புக்களையும் செய்ய வைக்கிறது.

வட மாகாண சபையில் ஆட்சி அமைத்தவர்களினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு முன்னால் எதுவுமே செய்ய முடியவில்லை என்பது உண்மை. ஆனால, இன்னொரு விடயம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருக்கின்றது.

அதாவது, வட மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றார்.

அது, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முயற்சி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது. இது, இந்தியாவினாலும், சர்வதேசத்தினாலும் குறிப்பிட்டளவில் வரவேற்கப்பட்டது.

இதிலிருந்து ஒரு விடயம் மெல்ல எழுந்து வந்தது. அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய சமிஞ்ஞைகளை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை நோக்கி விடுத்திருந்தது என்ற ஆரம்ப அறிகுறி.

ஆனால், அதிகாரங்களைக் கோரும் தமிழ் மக்களின் பக்கம் அரசாங்கம் எந்தவித விட்டுக்கொடுப்புக்களையும் செய்யத் தயாராகவில்லை என்பது இன்னமும் பெருவாரியாக வெளிப்பட ஆரம்பித்தது.

ஏனெனில், வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஆட்சி அமைந்தது முதல், மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கத்துக்கும் இடையில் பிரச்சினைகள் இருந்து வருகின்றன.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியைச் சந்தித்த முதலமைச்சர் தன்னுடைய கோரிக்கைகள் தொடரபில் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கு சார்ப்பு நிலையில் செயற்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி தன்னுடைய செயற்பாடுகளில் பதிலளிக்கவில்லை.

இந்தக் குற்றச்சாட்டுக்களை வெளிநாடுகளிடம் வட மாகாண முதலமைச்சர் தொடர்ந்து கூறி வருகின்றார். அதுபோக, வடக்கிலுள்ள இராணுவ பிரசன்னம் என்பது அச்சுறுத்தும் அளவுக்கு இருப்பதான குற்றச்சாட்டை மறக்காமல் தொடர்ந்தும் முன்வைக்கின்றார்.

அது எவ்வாறாக என்றால், இப்போது இலங்கை வரும் சர்வதேச தலைவர்களும் இராஜதந்திரிகளும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்க முக்கியஸ்தர்களைச் சந்திப்பது போலவே, வட மாகாண முதலமைச்சருக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து சந்தித்துச் செல்கின்றனர்.

ஏற்கெனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகளினால் அல்லற்படும் ஜனாதிபதியும் அரசாங்கமும் "மிதவாத தலைவர், முன்னாள் நீதியரசர்" என்று சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன் முன்வைக்கும் கருத்துக்களுக்கு ஓரளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என்பது பெரும் சிக்கல்தான். இந்தச் சிக்கலையும் அரசாங்கம் மேலதிகமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டுக்காக வருகை தந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கையின் இனமுரண்பாடுகளுக்கு தீர்வு காணும் யோசனைகளை முன்வைப்பதற்காக தென்னாபிரிக்காவினால் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்ட அந்நாட்டு துணை ஜனாதிபதி சிறில் ரமபோச உள்ளிட்ட தலைவர்கள், வட மாகாண முதலமைச்சரை சந்தித்தவர்களின் முக்கியமானவர்களாக கொள்ள முடியும்.

இதில், இன்னொரு சிறப்புச் செய்தி அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு எரிச்சலையூட்டக் கூடிய செய்தி என்னவெனில், அண்மையில் இந்தியா சென்று பிரதமர் மோடியைச் சந்தித்து திருப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், "வட மாகாண முதலமைசச்ரை, இந்தியப் பிரதமர் சந்திக்க விரும்புகிறார்" என்று வெளியிட்ட கருத்துக்கள்.

ஏனெனில், இலங்கைக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை புதிதாக பதவியேற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை என்கிற பிரச்சினை இருக்கின்றது. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நரேந்திர மோடி சந்தித்ததும், வட மாகாண முதலமைச்சரை சந்திக்க விரும்புவதும் அவ்வளவு உவப்பான செய்தியாக அரசாங்கத்துக்கு அமையாது.

இதனிடையே, கடந்த வாரத்தில் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் அவதானிக்கப்பட வேண்டியவை. அதாவது, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசுவதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.

ஆனால், மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்றும் அவர் கூறியிருக்கின்றார். அந்தக் கருத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிகரமாக எதிர்கொண்டாதாக கொள்ள முடியும். ஏனெனில், ஏற்கெனவே, அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பற்றி பேசுவதற்கு ஒன்றுமேயில்லை.

அதனை முழுமையாக அமுலாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று பதிலளித்துவிட்டது. இந்தப் பதில், தர்க்க ரீதியில் அனைத்துத் தரப்பினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆக, ஜனாதிபதி அடித்த பந்தை அவரை நோக்கியே திருப்ப அடித்துவிட்டிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கம், அதற்கு அப்பாலான அதிகாரப் பரவலாக்கம் என்ற செய்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக முன்வைக்க ஆரம்பித்திருக்கிறது.


ஆக, 13ஆவது திருத்தம் தீர்வில்லை என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உறுதியாக இருக்கின்றது. ஆனால், அதிகாரத்தை அடையும் வழிகளில் இளைப்பாறும் களமாக 13ஆவது திருத்தத்தையும் அதன் போக்கில் தோற்றுவிக்கப்பட்ட மாகாண சபை முறைமையும் காணுகிறது.

மற்றப்படி, அதிகாரப்பரவலாக்கம் என்பதே தமிழ் மக்களினதும், தங்களினதும் இறுதி இலக்கு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதி யாக கூறியிருக்கின்றது.

அதில், இன்னமும் உறுதியாக இருக்க வேண்டியதும், அதனை அடைவது தொடர்பிலான அக்கறையைக் கொள்ள வேண்டியதும் அவசியமானது. இவ்வாறானதொரு நிலையில், கிழக்கு மாகாண சபையில் ஆட்சியைப் பிடிக்க முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால், தன்னுடைய இளைப்பாறுதலுக்கான களமாக அல்லது தன்னுடைய பலத்தை பெருக்கும் களமாக வட மாகாண சபையையும், அதன் தேர்தலைய்யும் கொண்டிருக்கிறது.

ஆக, நகல் வரையப்பட்ட போதே தோல்வியோடு ஆரம்பித்த மாகாண சபை முறைமை, சில வெற்றிகளைக் காணுவதற்கு உதவியிருக்கின்றது. அதுவும், வட மாகாண சபையில் ஆட்சியமைத்ததனூடு மக்களின் அபிவிருத்தி தொடர்பில் பெரிதாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும் இராஜதந்திர ரீதியில் சில வெற்றிகளைக் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளலாம். அது, புதிய போராட்ட வடிவதற்கான தேவையாகவும், எதிர்நோக்கி பாய்வதற்கான களமாகவும் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.


*-தமிழ்மிரர்-*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2014-15.10.2014



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,
திருவாதிரை, புனர்பூசம்
1,2,3 ஆம் பாதங்கள்**

**உதவிக்கரம் நீட்டுபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் மிதுன இராசி நேயர்களே! நினைத்ததை நினைத்தபடி செய்யும் நேரம் இது!**

இந்த மாதம், ராசிநாதன் உச்சம் பெற்று, அவரோடு சகாய ஸ்தானாதிபதியும் இணைந்து சஞ்சரிக்கத் தொடங்குகிறார். இதனால், உங்களுக்கு வந்த துயரம் விலக்கி, வசந்த காலத்தை உருவாக்கும் மாதமாக இம்மாதம் அமையப் போகிறது. தன ஸ்தானத்தில் குரு உச்சம் பெறுகிறார். பஞ்சம ஸ்தானத்தில் சனி உச்சம் பெறுகிறார். சுக ஸ்தானத்தில் ராசநாதன் புதன் உச்சம் பெறுகிறார். ஆறு மற்றும் பதினொன்று ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 6ஆம் இடத்தில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார்.

எண்ணியதை முடிக்கும் விதத்தில் கன்னி ராசியில் ராகுவும், பதவிகளைக் கிடைக்கச் செய்யும் விதத்தில் 10இல் கேதுவும் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் அற்புதமான பலன்களை அள்ளி வழங்கப் போகிறார். எனவே, சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் துரிதமாக நடைபெறும். சந்தித்தவர்கள் சந்தோஷமான தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

உதிரி வருமானங்கள் பெருகும். நீண்ட நாள் வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும். பாசம் காட்டுவதுபோல வேஷம் போட்டவர்கள் விலகுவர். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக் கும். நாடு விட்டு நாடு சென்று நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாமா என்று ஒருசிலர் சிந்திப்பர். வீடு, மனை கட்டியதிலிருந்த பிரச்சினை அகலும்.

விருப்ப ஓய்வு பெற்று ஏதேனும் தொழில் செய்து சம்பாதிக்கலாமா என்ற சிந்தனை ஒரு சிலருக்கு மேலோங்கும். சனிப்பெயர்ச்சிக்குப் பின்னரே உத்தியோக மாற்றங்களை உறுதிப்

# நினைத்ததை நினைத்தபடி செய்யும் நேரம் இது!

படுத்திக் கொள்வது நல்லது.

சூரிய ராகு சேர்க்கை இருப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். வாகனப் பழுதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். வைத்திருக்கும் பழைய வாகனங்களை கொடுத்து விட்டுப் புதிய வாகனங்களை வாங்க வேண்டுமென்ற சிந்தனை மேலோங்கும். வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் கூடும். பொதுவாக நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் அம்பிகைக்கு அர்ச்சனை செய்து வழிபாடு செய்வது நல்லது. குறிப்பாக விஜய தசமியன்று வெற்றி பெற்ற அம்பிகையின் வழிபாட்டில் கலந்து கொண்டால் வழக்குகள் சாதகமாக அமையும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 26ஆம் திகதி சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்திற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம் தான் என்றாலும் 5ஆம் இடத்திற்கும் அதிபதியாக சுக்ரன் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகலாம். அதன் காரணமாக எதிர்பாராத விதத்தில் செலவுகள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு விலையுயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். நீச்ச சுக்ரன் உச்ச புதனோடு இணைந்து நீச்ச பங்க ராஜ யோகத்தை உருவாக்குவதால் தொழிலில் பாதிப்பு ஏற்படாது. தொகை வரவிலும் தாமதம் ஏற்படாது.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**


தனுசு ராசியில் அக்டோபர் 13 முதல் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மறைமுக எதிர்ப்புகள் உருவாகலாம். தொழில் போட்டிகள் அதிகரிக்கும்.

உடன்பிறப்புகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான். வெளிநாட்டு முயற்சிகளில் தடை ஏற்படும். எனவே, இது போன்ற காலங்களில் திசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. ஒரு கடனை அடைக்க, மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும். சங்கிலித் தொடர்போல கடன் சுமை வந்தாலும் தன்னம்பிக்கையோடு பணியாற்றிப் பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். இம்மாதம் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, ஆகிய மூவரையும் வழிபட்டு துயரங்கள் விலக வழியமைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அழகிய இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் பூர்த்தியாகும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். சேமிப்பு உயரும். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின் வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் அனுசரிப்பு இருப்பதன் மூலம் அமைதி காண இயலும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் நடைபெறலாம். வீடு மாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். நவராத்திரி நாயகியைக் கொண்டாடி முப்பெரும் தேவியை வழிபட்டால் ஒப்பற்ற வாழ்வு அமையும்.

# சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம்,
பூசம், ஆயிலியம்**

**மற்றவர்கள் பிரச்சினைக்கு மாறுபட்ட அணுகுமுறையில் தீர்வு காணும் கடக இராசி நேயர்களே! விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்க நாளில் ராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதுமட்டுமல்லாமல் தனாதிபதி சூரியன் விரயாதிபதி புதனுடன் இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ராகுவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. உச்சம் பெற்ற சனி அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரிக்கின்றார்.

எனவே, கூடுதல் விரயங்கள் ஏற்படும் மாதமாகவே இந்த மாதம் அமையப் போகிறது. எதிலும் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும். 6, 9 இற்கு அதிபதியான குருபகவான் உங்கள் ராசியில் உச்சம் பெற்றிருக்கிறார். அதன் பார்வை யோகக்காரகன் செவ்வாய் மீது பதிகிறது. எனவே, குரு மங்கள யோகம் ஏற்படுகிறது.

இதனால், இல்லத்தில் சுபகாரிய நிகழ்வுகள் ஏற்படுவதிலிருந்த தடைகள் அகலும். வயது கூடிக்கொண்டே போகிறது வரன்கள் வரவில்லையே, வந்த வரனும் பொருத்தமாக அமையவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சி தரும் வண்ணம் திருமண வாய்ப்புகள் கைகூடப் போகிறது. குழந்தைகள் நலன்கருதி எடுத்த முயற்சிகளிலும் அனுகூலம் கிடைக்கும். ஒருசிலர் பிள்ளைகளை மேல் படிப்புக்கு வெளிநாட்டுக்கு அனுப்பலாமா? என்று யோசிப்பர்.

அதற்காக எடுத்த முயற்சிகளில் இப்பொழுது வெற்றி கிடைக்கப் போகிறது. உச்ச புதனின் ஆதிக்கத்தால் சகோதர வர்க்கத்தினருக்கு என்று ஒரு தொகையை செலவிடப் போகிறீர்கள். கூடப்பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். என்னயிருந்தாலும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் அலைச்சல் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கும். லாபாதிபதி 2இல் சஞ்சரிப்பதால் அதற்கேற்ற விதத்தில் ஆதாயம் கிடைக்கும்.

விவசாயம் மற்றும் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு வியக்கும் விதத்தில் முன்னேற்றம் வந்து சேரப் போகின்றது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் விரதமிருந்து குருபகவானை வழிபடுவதன் மூலம் முறையான முன்னேற்றங்கள் வந்து சேரும். முழு நிலவு பிரகாசிக்கும் நாளில் கிரிவலம் வருவதன் மூலமும் நீங்கள் கீர்த்திகளை வரவழைத்துக் கொள்ள இயலும். குறிப்பாக நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெருந்தேவியை வழிபட்டு வந்தால் ஒப்பற்ற நற்பலன்கள் கிடைக்கும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 26ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். உங்கள் ராசியைப் பொறுத்தவரை இது நன்மைதான். அதே நேரத்தில் குடும்பத்தில் குழப்பங்கள் உருவாகும். கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் கடைசி நேரத்தில்தான் கைகூடும். அடிமைத் தொழிலிருந்து ஒருசிலர் சுயதொழிலுக்கு வர முயற்சிப்பர். கூட்டுத் தொழில் உங்களுக்கு ஏற்றதாக அமையாது. கொள்கைப் பிடிப்பை அடிக்கடி தளர்த்திக் கொள்ள நேரிடும். அதே நேரத்தில் மாற்றினத்தவர்களாக இருந்தால் தொழில் வளம் பெருக உறுதுணையாக இருப்பர்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 13ஆம் திகதி தனுசு ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 5இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் தொல்லைகள் உருவாகும். உங்கள் பேச்சைக் கேட்காமல் அவர்கள் தானாகவே ஒரு முடிவெடுத்து பிரச்சினைகளை உருவாக்கலாம். வரும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு இருந்தாலும்கூட மனநிம்மதி குறையுமல்லவா? எனவே, குழந்தைகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளால் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எனவே திடீர் இடமாற்றம், இலாகா மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். இட [illegible] மூலம் தனலாபம் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. இம்மாதம் நவராத்திரி விழாவில் இடம்பெறும் நாயகியர் மூவரையும் வழிபட்டு நல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதமென்றே சொல்லலாம். சுற்றத்தார் வரவு உண்டு. அதன்மூலம் சில பிரச்சினைகளையும் நீங்கள் சந்திக்க நேரிடலாம். பிறரை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. கணவன்-மனைவி உறவில் பிரியங்கள் கூடுதலாக இருந்தாலும். மனநிம்மதி ஓரளவுதான் இருக்கும். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்வுகள் படிப்படியாக நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். மகாளய அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். புதனின் வக்ர காலம் உங்களுக்கு பொற்காலமாக இருக்கும். சம்பள உயர்வுடன் புதிய உத்தியோக வாய்ப்புகள் வந்து சேரலாம். மாமன், மைத்துனர் வழி அனுகூலம் உண்டு. அம்பிகை வழிபாட்டால் இன்பங்கள் வந்து சேரும்.

**(தொடரும்)**

# விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுபல சேனா அமைப்பைப் பயன்படுத்தி இலங்கைக்குள் ஊடுருவும் ஐ.எஸ்.ஐ.எஸ்

## இந்திய ஊடகம் தகவல்

(கொழும்பு)

பொதுபலசேனாவை பயன்படுத்தி இலங்கையில் முஸ்லிம்கள் மத்தியில் ஆழமாக காலூன்றும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ் தென்னிந்தியாவில் செயற்படுவதற்கான ஆட்களை திரட்டுவதாக இந்தியாவின் இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பொதுபல சேனாவின் தோற்றம் என்பது மிக முக்கியமான விடயம், பௌத்தர்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக 2012 இல் ஆரம்பிக்க ப்பட்ட இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் இலக்கு வைப்பதே,

இந்த அமைப்பின் தோற்றம் என்பது பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ்சை பொறுத்தவரை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இந்த அமைபபு இலங்கையில் கால்பதிப்பதற்கு பல வருடங்களாக முயற்சிசெய்தது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை. இதற்கு விடுதலைப் புலிகளின் பலமும் ஒரு காரணம். அந்த அமைப்பு வெளிநாட்டவர்களை ஒருபோதும் இலங்கைக்குள் காலடி எடுததுவைக்க அனுமதிக்க வில்லை.

மேலும் இலங்கை முஸ்லிம்களுக்கும் புலனாய்வு அமைப்புகளுக்குமிடையே தொடர்புகள் இல்லாமலிருந்ததும் ஒரு காரணம்.

ஐ.எஸ்.ஐ.எஸ் இன் திட்டம் மிக சுலபமானது- இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பாதுகாப்பின்மையை உருவாக்குவது இதன் மூலமாக அவர்கள் பாதுகாப்பை தேட வைப்பது.

பாகிஸ்தான் மறைமுகமாக பொதுபல சேனாவிற்கு நிதிவழங்கும், இதனால் முஸ்லிம்களுக்கு எதிரான அட்டூழியம் அதிகரிக்கும், இதன் பின்னர் முஸ்லிம்கள் பாதுகாப்பிற்காக ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற அமைப்புகளை நாடுவார்கள்.

பொதுபல சேனா முக்கியத்துவம் பெற தொடங்கிய பின்னரே ஐ.எஸ்.ஐ.எஸ் இன் கொழும்புத் திட்டம் வளர்ச்சியடையத் தொடங்கியது. பொதுபலசேனா முஸ்லிம்கள் மீதான தனது சீற்றத்தை வன்முறை தாக்குதல்கள் மூலமாக வெளிப்படுத்தியது.

முஸ்லிம்களின் கடைகளை புறக்கணிக்க கோரியது. ஹலால் உணவுகள் மீது தடைவிதித்தது.

பாகிஸ்தானின் புலனாய்வு பிரிவு இந்த தருணத்திற்காகவே காத்திருந்தது.

பாகிஸ்தான் தூதரக அதிகாரியான அமீர் சுபைர் சித்திக் தலைமையில் பாகிஸ்தான் உளவுப் பிரிவு தனது திட்டத்தை செயற்படுத்த தொடங்கியது.

இலங்கை யல் முஸ்லம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் தனது நபர்கள் சுதந் திரமாக செயற்பட அவர் அனுமதி வழங்கினார்.

அவர்கள் முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் பொதுபல சேனாவின் அத்துமீறல்கள் குறித்து பேசினார்.

அதன் பின்னர் ஒருவருட காலத்திற்குள் பாகிஸ்தான் புலனாய்வு பிரிவு 50 பேரை சேர்த்துள்ளது.

தென்இந்தியாவை இலக்கு வைத்துச்செயற்படுவதற்காக அவர்களுக்கு கொழும்பில் வலுவான வலையமைப்பு தேவையாகவுள்ளது. அருண் கைது அவர்களது தென்னிந்திய தந்திரோபாயத்தை புலப்படுத்துகின்றது என்கின்றன இந்திய புலனாய்வு வட்டாரங்கள்.


பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு தென்னிந்தியா குறித்து முடிந்தளவிற்கு தகவல்களை சேகரிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

தென்னிந்தியாவில் தாக்குதல் என்ற பாரிய திட்டம் காணப்படும் அதே வேளை இந்த குழுக்கள் நம்பகத்தன்மை மிக்க நபர்களையும், போக்குவரத்து பாதைகளையும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பிற்கும் கோடிக்கரைக்குமிடையே நம்பகத்தனமை மிகுந்த வலையமைப்பை உருவாக்கி அதன்மூலமாக ஆயுதங்களையும் உறுப்பினர்களையும் கொண்டுவருவதற்கு முயல்கிறனர்என்றும்இந்திய புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

கோடிக்கரையே பாகிஸ்தான் உளவுப்பிரிவிற்கு சுலபமானது. இப்பகுதியில் பாதுகாப்பு என்பது பலவீனமாகவுள்ளது என மேலும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு தங்கம் கடத்திய 2பேர் கைதாகினர்



(கொழும்பு)

இலங்கைக்கு தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கக கட்டிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக தங்கம் கடத்திய இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத்தின் பெறுமதி ஒரு கோடி ரூபா என சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் 26 மற்றும் 32 வயதுடைய கண்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சுங்கப்பிரிவினர் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## புத்தளத்தில் பன்னிரண்டு பேர் நேற்று முன்தினம் கைதாகினர்

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 6 பேர் உட்பட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மேலும் 6 பேரையும் புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்ததாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின்போதே இவர்களை கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், வழக்கு விசாரணைகளுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமையால் இவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கபபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி 6 பேரில் இருவருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து வைத்திருந்ததாகக் கூறப்படும் 2 பேரையும் கஞ்சா வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரையும் ஹெரோயின் வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரையும் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்றதாகக் கூறப்படும் 2 பேரையும் கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், மணல் ஏற்றிச்சென்ற 2 லொறிகளை கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை மேற்படி சந்தேக நபர்களை புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ)

## சுயாதீன ஆணைக்குழு அமைப்பது அவசியமே

### பவ்ரல் சுட்டிக்காட்டு



இலங்கையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர்ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபையில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சுயாதீன ஆணைக்குழுக்களின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுயாதீனமாக செயற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். எனினும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுயாதீனமாக செயற்பட்டால் அவர்களை பாதுகாக்கக்கூடிய எந்தவொரு பொறிமுறைமையும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டால் அதிகாரிகள் சுயாதீனமாக செயற்பட வழி ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபை தேர்தலின் போது 750 பவ்ரல் பணியாளர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள் என தெரிவித்துள்ளார். மொனராகல மாவட்டத்தில் ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும், கடந்த சில நாட்களாக நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஊவா மாகாணத்தில் ஆளும் கட்சியினர் மீதே அதிகளவு முறைப்பாடுகள்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## எபோலாவை தடுக்க இலங்கையும் உதவி



மேற்கு ஆபிரிக்க பிராந்திய வலய நாடுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பிராந்திய வலய நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கையுறைகளை ஜனாதிபதி நன்கொடையாக வழங்கியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி கலாநிதி பிர்தோசியிடம் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் வைத்து, ஜனாதிபதி இந்த கையுறைகளை வழங்கியுள்ளார்.

எபோலா வைரஸ் காரணமாக ஆபிரிக்க நாடுகளில் 2 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

எபோலா வைரஸ் உலகப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## முதலமைச்சர் வேட்பாளரைக் கண்டு அஞ்சிநடுங்குகிறது அரசாங்கத்தரப்பு

### அசாத்சாலி தெரிவிப்பு

ஹரின் பெர்னாண்டோ மீதான அச்சமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊவாவில் வீடு வீடாக சென்று மக்களை சந்திக்க வைத்துள்ளதோடு மின்சாரம் உட்பட எரிபொருட்களின் விலைகளை சடுதியாக குறைக்க வைத்துள்ளது என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் பெற்றோல் விலை குறைந்தும் எம் நாட்டில் குறையவில்லை. பெற்றோல் 100 ரூபாய்க்கு கொடுக்க வேண்டும் என்று ரவிகருணாநாயக்க வழக்கு தொடர்ந்து அதில் வெற்றி பெற்ற போது கூட நீதிமன்ற தீர்ப்பை மீறி தான் நிர்ணயித்த விலையில் பெற்றோலை விற்பனை செய்த ஜனாதிபதி சடுதியாக எரிபொருட்களின் விலைகளை குறைத்தமை ஊவா தேர்தலில் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாகவேயாகும்.

ஊவாவில் ஹரின் பெர்னாண்டோவை நினைத்து ஜனாதிபதி அச்சப்பட்டுள்ளார். அதனால்தான் இந்த விலை குறைப்பு நாடகங்களில் ஈடுபட்டுள்ளார்.

உண்மையில் பாராளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ முதலமைச்சு பதவியாக தேர்தலில் குதித்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

ஊவா தேர்தல் பிரசாரங்கள் முடிந்து நாம் வந்த பின்னர் நேற்று முன்தினம் இரவு அங்கு ஜும்மா பள்ளிவாசலுக்கு இனம்தெரியாதவர்களினால் கல்வீச்சு தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிச்சயம் பொலிஸார் இதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இதற்கு முன்னர் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் கூட இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அரசாங்கம் தொடர்ந்து மக்களை சுரண்டி வருவதோடு நாட்டினை சீனாவிற்கு மேலும் தாரை வார்த்து கொடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தியை எதிர்த்து போராடியவர்கள் 500 பேர் பொலிஸாரினால் கைது



லைகா நிறுவனம் தயாரித்துள்ள கத்தி திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவை தடுத்து நிறுத்தக் கோரி போராடிய 500-க்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட னர்.

கத்தி திரைப்படப்பாடல் வெளியீடுக்கு எதிராகவும், கத்தி திரைப்படத்தை தடை செய்யக் கோரியும் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பினர் சார்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அத்திரைப்ப டத்தின் பாடல் வெளியீட்டு விழா நடைபெற்ற சென்னை லீலா பேலஸ் ஹோட்டலை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 500இற்கும் மேற்பட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டத்தில் பெருந் திரளானோர் கலந்து கொண்டனர். இந்த போராட்டத்தின்போது, அங்கு வைக்கப்பட்டிருந்த லைக்காவின் கத்தி விளம்பரப் பதாதைகள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன. லைக்கா நிறுவுநர் சுபாஸ்கரன், நடிகர் விஜய், இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் ஆகியோருக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்தப் போராட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கோவை ராம கிருஷ்ணன், , புரட்சி பாரதம் கட்சி தலைவர் பூவை மூர்த்தி, தமிழ் தேச விடுதலை இயக்கத் தலைவர் தியாகு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தபசி குமரன், தமிழர் முன்னேற்றப் படை தலைவி வீரலட்சுமி, முற்போக்கு மாணவர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பாரதச் செய்தி

# உயிருடன் பெண் குழந்தையை நிலத்தினில் புதைத்து வழிபாடு

ராஜஸ்தான் மாநிலத்தில் குழந்தையை உயிருடன் புதைத்து வழிபாடு செய்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் மாவட்டம் கும்கெர் கிராமத்தை சேர்ந்த வினோத், ஶ்ரீமதி தம்பதியினரின் 2 1/2 வயது மகள் குஷ்பு பிறந்ததில் இருந்து நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார்.

இதனால் சிறுமியை மருத்துவர் மற்றும் மாந்தீரிகரிடம் அழைத்து சென்று சிகிச்சை அளித்து வந்தனர். அப்படி இருந்தும் உடல் நலம் சரியாகவில்லை.

இந்நிலையில் இவர்கள், மகளுக்கு தெய்வ அருள் இருப்பதாகவும், உயிருடன் புதைத்தால் சரியாகிவிடும் என்று கருதினர்.

இதை தொடர்ந்து சிறுமி குஷ்புவை உயிரோடு புதைத்ததோடு மட்டுமல்லாமல், அவர் புதைக்கப்பட்ட இடத்தில் வழிபாடு செய்துள்ளனர். மேலும் அந்த பகுதியை சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் அங்கு குவிந்து பழங்கள், பூக்கள், பணங்களை வைத்து பிராத்தனை செய்துள்ளனர்.

இதனால் அந்த கிராமம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது. இதற்கிடையில் இந்த சம்பவம் பற்றி அறிந்ததும் பொலிஸார் அங்கு சென்று, சிறுமி புதைக்கப்பட்ட இடத்தை தோண்டி உடலை எடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.பிரேத பரிசோதனை அறிக்கையில் அந்த சிறுமி கடுமையான வயிற்று போக்கால் பாதிக்கப்பட்டு இருந்தது தெரியவந்துள்ளது.

தற்போது இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். (இ)

# எல்லை மீறும் சீன இராணுவம்

(சென்னை)

இந்திய எல்லையில் வாலாட்டி வரும் சீன இராணுவம் இந்திய பகுதியான லடாக்கில் இருந்து வடகிழக்காக உள்ள சுமர் பகுதியில் மூன்று இடங்களில் 600 வீரர்களை நிலை நிறுத்தியுள்ளது.

அந்நாட்டு ஜனாதிபதி இந்தியா வந்துள்ள நிலையில் சீன வீரர்கள் இவ்வாறு நடந்து கொள்வது நாடு முழுவதும் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இரு தரப்பிலும் கொடி சந்திப்புகள் நிகழ்ந்த போதும் அத்துமீறலை கைவிட்டு வெளியேறாமல் மேலும் மேலும் இராணுவ வீரர்களை சீனா அப்பகுதிக்கு அனுப்பி வருகிறது. இதனால் கொடி சந்திப்புகளை நடத்துவதில் அர்த்தமில்லை என்று இந்திய தரப்பு முடிவெடுத்ததால் அச்சந்திப்புகள் நிகழவில்லை.





சீன வீரர்கள் முகாமிட்டுள்ள இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் இந்திய இராணுவ வீரர்களும் முகாமிட்டு அவர்களை மேலும் முன்னேறவிடாமல் தடுத்து வருகின்றனர். இதேவேளை அத்துமீறலை கைவிட்டு அவர்களை தங்கள் எல்லைக்கு திரும்ப செல்லுமாறும் இந்திய தரப்பு வற்புறுத்தி வருகிறது.

இந்நிலையில் மூன்று இடங்களிலும் முகாமிட்டுள்ள தங்கள் இராணுவ வீரர்களுக்கு ஹெலிகொப்டர் மூலம் உணவுப் பொட்டலங்களை சீனா வீசியுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் மூன்று முறை சீன ஹெலிகொப்டர் அப்பகுதிக்கு பறந்து வந்ததாக கூறப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் தங்கள் எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் வீதி போடும் பணியில் சீன இராணுவம் ஈடுபட்டு வருகிறது. அப்பணியில் ஈடுபடும் போது வீதிப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் இந்திய எல்லைக்குள் வந்து செல்கின்றனர். இதற்கு இந்திய தரப்பு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

ஆனால் வீதிப்பணி ஊழியர்களோ தங்களை இந்தியாவுக்கு சொந்தமான பகுதியாக இருக்கும் டைபிள் பகுதி வரை 5 கி.மீ தூரத்திற்கு வீதி போடுமாறு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளதாக அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர். (இ)



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட சீன ஜனாதிபதி ஜி.ஜின்பின், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோருடன் சந்திப்பினை மேற்கொண்டவேளை...

# புனித தலமான மானசரோவர்; புதிய பாதைக்கு சீனா அனுமதி

## பிரதமர் மோடி நன்றி தெரிவிப்பு

இந்துக்களின் புனித தலமான கைலாயமலை மற்றும் மானசரோவர் ஏரி சீன எல்லையில் திபெத் பகுதியில் அமைந்துள்ளது. 19 ஆயிரத்து 500 அடி உயரத்தில் அமைந்துள்ள கைலாய மலைக்கும், மானசரோவர் ஏரிக்கும் இந்துக்கள் சென்று வருவதை மிகப்பெரும் புண்ணியமாக கருதி வருகிறார்கள். இந்த பகுதிக்கு இதுவரை உத்தரகாண்ட் மாநிலம் வழியாக பக்தர்கள் சென்று வந்தனர். இந்த பாதையில் செல்வதற்கு பக்தர்கள் மலைச்சரிவுகளிலும், காடு, மேடுகளிலும் நடந்து தான் செல்ல வேண்டிய நிலை இருந்துவந்தது. வயதான பக்தர்கள் கோவேறு கழுதை மீது பயணம் செய்வார்கள். மழைக்காலங்களில் இந்த பாதையில் பக்தர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உத்தரகாண்ட், லிபு ஏரி வழியாக செல்லும் அந்த பாதை கடந்த ஆண்டு பெய்த பலத்த மழை வெள்ளத்தில் மிகவும் சேதமடைந்தது. இதனால் கடந்த ஆண்டு கைலாய மலைக்கு சென்ற அதிகாரப்பூர்வமான பக்தர்களின் எண்ணிக்கை 51 ஆக குறைந்தது.

ஆனால் சீன பகுதியில் இதற்கு ஒரு மாற்றுப்பாதையும் இருக்கிறது. அந்த பாதையில் கைலாய மலைக்கு செல்லும் பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என்று இந்திய அரசு பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தது. வருடந்தோறும் ஏப்ரல் மாதம் பீஜிங்கில் நடைபெறும் இரு நாட்டு அதிகாரிகள் மட்டத்திலான எல்லை பிரச்சினை பேச்சுவார்த்தையின் போது இந்த கோரிக்கையும் எழுப்பப்படுவது வழக்கமாக இருந்தது.

இந்நிலையில் இந்தியா வந்துள்ள சீன ஜனாதிபதி ஜின்பிங் நேற்றுமுன்தினம் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையில் கைலாய மலை, மானசரோவர் ஏரிக்கு செல்வதற்கான புதிய பாதையை திறப்பதற்கு சீன ஜனாதிபதி ஒப்புக்கொண்டார். இதுதொடர்பாகஇருவருக்கும்இடையே ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

இந்த புதிய பாதையானது சிக்கிம் மாநிலம், ராதுலா மற்றும் ஷிகேட்ஸ் நகரம் வழியாக செல்லக்கூடியது. இந்த பாதையில் வாகனங்களில் செல்லும் அளவுக்கு வீதி வசதிகளும் உள்ளது. எனவே இந்த பாதையில் அச்சம் இன்றி, பாதுகாப்பாக பக்தர்கள் செல்ல முடியும் என்பதுடன், வயதான பக்தர்கள் எளிதாக வாகனத்திலும் சென்று வர முடியும். மழைக்காலத்திலும் பக்தர்கள் சிரமம் இன்றி செல்ல முடியும். அதோடு பயண தூரமும், நேரமும் கணிசமாக குறையும்.

இந்த புதிய பாதையை திறந்து விட அனுமதி வழங்கியதற்காக சீனஜனாதிபதி ஜின்பிங்குக்கு, பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். இது குறித்து பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதாவது,


கைலாய மலை, மானசரோவர் ஏரிக்கு நாதுலா வழியாக புதிய பாதையை திறப்பதற்கு அனுமதித்த சீன ஜனாதிபதி ஜின்பிங்குக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதுள்ள உத்தரகாண்ட் வழியாக செல்லும் பாதையுடன், இந்த புதிய பாதையும் கூடுதலாக பயன்படுத்தப்படும்.

இந்த புதிய பாதை மூலம் பக்தர்களுக்கு அதிக பலன்கள் கிடைக்கும். வாகனங்கள்மூலமே கைலாய மலைக்கும், மானசரோவருக்கும் சென்றுவர முடியும். இது குறிப்பாக வயதான பக்தர்களுக்கு மிகவும் பலன் அளிப்பதாக இருக்கும். மழைக்காலங்களில் இது பாதுகாப்பான மாற்றுப்பாதையாகவும் இருக்கும். பக்தர்களின் பயண தூரமும், நேரமும் கணிசமாக குறையும்.

இதன்மூலம் இனி அதிகமான பக்தர்கள் கைலாயம் மற்றும் மானசரோவர் சென்று வருவார்கள் எனபிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை, பீரங்கி தாக்குதலில் ஈராக்கில் 30 பேர் உயிரிழந்தனர்



ஈராக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்கொலை படை தாக்குதல் காரணமாக 15 பேரும், பீரங்கி தாக்குதலில் 15 பேரும் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பக்தாத்திற்கு வடக்கே உள்ள சியா மாவட்டத்தில், காசிமியாஹ் என்ற பகுதியில் உள்ள சோதனைச்சாவடி மீது வெடிகுண்டுகள் நிரப்பிய காருடன் வந்த தீவிரவாதி ஒருவன் அதை வெடிக்கச்செய்து தற்கொலைப்படை தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறிது நேரத்திலேயே அம்மா வட்டத்தில் உள்ள மேலும் பல பகுதிகளில் 3 முறை பீரங்கி தாக்குதலும் நடைபெற்றுள்ளது.

பீரங்கி தாக்குதலில் அப்பகுதியில் இருந்த வீடுகளும், பேருந்து நிலையமும் பெருத்த சேதத்திற்கு உள்ளானதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலில் சுமார் 30 பேர் வரை கொல்லப்பட்டதாகவும் மேலும் 31 பேர் காய மடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# ஐக்கிய இராச்சியம் முழுவதிலும் அதிகாரப்பகிர்வு அமுலாக்கப்படும்

## டேவிட் கமரூன் அறிவிப்பு



ஸ்கொட்லாந்துக்கு மட்டுமன்றி, ஐக்கிய இராச்சியத்தில் இருக்கும் இங்கிலாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய எல்லா தரப்பினருக்கும் அதிகாரப் பகிர்வு செய்யப்படும் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் உறுதியளித்திருக்கிறார்.

பிரிட்டனில் இருந்து ஸ்கொட்லாந்து தனியாக பிரிந்து போகக் கூடாது என்று பிரசாரம் செய்த பிரிட்டனின் மூன்று முக்கிய கட்சிகளான, ஆளும் கன்சர்வேடிவ் கட்சி, அதன் கூட்டாளியான லிபரல் டெமாகரெடிக் கட்சி மற்றும் பிரதான எதிர்க் கட்சியான லேபர் கட்சி ஆகிய மூன்றும இணைந்து தமது பிரசாரததின் போது ஒரு உறுதிமொழியை ஸ்கொட்லாந்து வாக்காளர்களுக்கு அளித்தனர்.

பிரிட்டனில் இருந்து ஸ்கொட்லாந்து பிரியக்கூடாது என்று அதிகப்படியான ஸ்கொட்லாந்து வாக்காளர்கள வாக்களித்தால் ஸ்கொட்லாந்துக்கு மேலதிக அதிகாரங்களை பகிர்ந்தளிப்போம் என்று இந்த மூன்று கட்சியின் தலைவர்களும் கூட்டாக ஒரு உறுதிமொழியளித்திருந்தனர்.

தற்போது, ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து செல்ல வேண்டாம் என்று பெரும்பான்மை ஸ்கொட்லாந்து வாக்காளர்கள் வாக்களித்திருக்கும் நிலையில், ஸ்கொட்லாந்துக்கு மேலதிக அதிகாரங்கள் அளிப்போம் என்கிற பிரிட்டனின் மூன்று முக்கிய கட்சிகளும அளித்திருந்த முந்தைய உறுதி மொழி நிறைவேற்றப்படும் என்று டேவிட் கமரூன் தெரிவித்திருக்கிறார். (இ)




# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது விமானம்

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்நாட்டு போர் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியுள்ளமை சர்வதேச ரீதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் பல்வேறு நகரங்களை கைப்பற்றி உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், இவ்வமைப்பின் தீவிரவாதிகள் பலர் ஈராக்கை விட்டு சிரியாவின் கிழக்குப் பகுதியை நோக்கி முன்னேறி வருகின்றனர்.

இந்நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள முக்கிய நகரமான அல்-ரக்கா மீது



சிரியாவின் போர் விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்த போது, அவர்கள் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் கொண்டு அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இது தொடர்பில் சிரியாவின் மனித உரிமை கண்காணிப்பு ஆணைக்குழு வெளியிட்டுள்ள தகவல்களின் படி, தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானம் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்துள்ளது. இதில் அந்தப் பகுதிகளில் இருந்த மக்கள் சிலர் கொல்லப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போர் விமானத்தை தாக்கி அழிக்கும் நவீன ஆயுதங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வைத்திருப்பது உலக நாடுகளை அச்சமடையச் செய்துள்ளது.

உக்ரைன் போராளிகளால் கடந்த ஜூலை மாதம் மாஸ் விமானம் எம்எச் 17 சுட்டு வீழ்த்தப்பட்டது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே கூறப்படுகின்றது. (இ)

# எபோலா பணிக்குழுவினர் மீது கினியாவில் கொடூர தாக்குதல்

## 8 பேர் பலி!

உலக நாடுகள் அனைத்தும் தம்மை எபோலா என்னும் கொடிய விஷத் தொற்று நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள தீவிரமாக பணியாற்றி வருகின்றன. கடந்த பெப்ரவரியில் கினியாவில் பரவத் தொடங்கிய எபோலா இதுவரை 2 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்டோரைப் பலியாக்கியுள்ளது. இந்த நோய்த் தாக்கத்தினால் இன்னும் 20 ஆயிரம் பேருக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று உலக சுகாதாரக் கழகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அந்நாட்டின் செரிகொரே நகரத்தின் அருகில் உள்ள வோம்மே என்ற கிராமத்தில் எபோலா பற்றிய விழிப்புணர்வினையும், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துரைக்க சுகாதாரக் குழு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை சென்றுள்ளது.

இந்தப் பகுதிகளில்தான் முதன் முதலில் எபோலா நோய்த்தாக்கம் வெளித்தெரிந்துள்ளது.

இருப்பினும், எபோலா என்னும் தொற்று கறுப்பின மக்களை அழிப்பதற்காக வெள்ளையர்கள் கண்டு பிடித்த ஒரு விடயம் என்ற எண்ணத்தில் உள்ள மக்கள் இந்தக் குழுவினரை கம்புகளாலும், கற்களாலும் தாக்கியுள்ளதாக கினியா வானொலி செய்திகள் கூறுகின்றன.

இதனைத் தொடர்ந்து வைத்தியர்கள், செய்தியாளர்கள் போன்றோர் இருந்த அந்தக் குழுவானது அருகில் உள்ள புதர்ப்பகுதிகளுக்குள் தப்பித்து மறைந்துபோனார்கள் என்றும் செய்திகள் குறிப்பிட்டன.

பின்னர் நேற்று முன்தினம் வெளிவந்துள்ள மற்றொரு அரசு அறிக்கையில் பத்திரிகையாளர்கள் உட்பட எட்டு பிரதிநிதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 21 பேருக்கு மேல் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா நோய்த்தாக்கத்தை எதிர்த்துப் போராடும் உள்ளூர் மற்றும சர்வதேசக் குழுக்களின் சவால்களை காட்டுவதாக இந்த சம்பவம் அமைந்துள்ளது என்று செய்திகள் குறிப்பிடுகின்றன.

இது குறித்து விசாரிக்கவும் சரிபார்ப்பதற்காக அரசுக்குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசு செய்தித் தொடர்பாளர் டமண்டங் தெரிவித்துள்ளார். (இ)

# மகள் மற்றும் 6 பேரக்குழந்தைகளை சுட்டுக்கொன்று தானும் தற்கொலை

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் கில்கிறிஸ்ட் பகுதியில் உள்ள பெல் என்ற இடத்தை சேர்ந்தவர் டான் சார்லஸ் ஸ்பிரிட். இவருக்கு தற்போது 61 வயது. இவரது வீட்டில் அவரது மகள் மற்றும் 6 பேரக்குழந்தைகள் தங்கியிருந்தனர். அவர்களை டான் சார்லஸ் ஸ்பிரிட் தான் வைத்திருந்த துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுக்கொன்றார். கொல்லப்பட்ட குழந்தைகள் 3 மாதம் முதல் 10 வயது வரையிலானவர்கள் என கூறப்படுகிறது.

இவர்களை கொன்ற சிறிது நேரத்தில் தானும் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த தகவலை கில்கிறிஸ்ட் நகர ஷெரீப் ராபர்ட் ஸ்கவுல்ட்ஷ் தெரிவித்தார். எதற்காக இந்த கொடூர செயலில் அவர் ஈடுபட்டார் என தெரியவில்லை. அது போன்று நான் எங்கும் பார்த்ததில்லை என்றார்.

7 பேரை கொலை செய்து தற்கொலை செய்து கொண்ட ஸ்பிரிட் முன்பும பல குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளி ஆவார். ஏற்கனவே நடந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் தண்டனை பெற்றவர் கடந்த 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுதலையானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பிரிட்டனிலிருந்து தனியாக பிரிவதை நிராகரித்தனர் ஸ்கொட்லாந்து மக்கள்

பிரித்தானியாவில் இருந்து தனி நாடாகப் பிரிந்து போவதை ஸ்கொட்லாந்து மக்கள் நிராகரித்துள்ளனர்.

பிரித்தானியாவில் இருந்து தனி நாடாகப் பிரிந்து போவதா, இல்லையா? என்பது தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஸ்கொட லாந்தில் நடத்தப்பட்ட கருத்தறியும் சர்வஜன வாக்கெடுப்பில் பிரிவினைக்கு எதிராக 55.42 சதவீதமான வாக்குகளும், பிரிவினைக்கு ஆதரவாக 44.58 சதவீதமான வாக்குகளும் பதிவாகியுள்ளன.

ஸ்கொட்லாந்தில் மொத்தமுள்ள 32 உள்ளூராட்சிப பிரதேசங்களில் 31 உள்ளூராட்சிப் பிரதேசங்களின் உத்தியோகபூர்வ முடிவுகளும் வெளியாகியுள்ளன.

இதன்படி பிரித்தானியாவில் இருந்து ஸ்கொட்லாந்து தனிநாடாகப் பிரிந்து செல்லக்கூடாது என்று 1,914,187 பேரும், பிரித்தானியாவில் இருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்று 1,539,920 பேரும் வாக்களித்துள்ளனர்.

இத்தேர்தல் முடிவுகளின்படி முன்பு கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்ததை விட, பிரிவினையை எதிர்ப்பவர்களின் வாக்குகள் சுமார 3 சதவீதம் அதிகரித்திருப்பதை இறுதி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.



ஸ்கொட்லாந்தில்நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலில் சுமார் 80 சதவீதத்துக்கு மேலானோர் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் இருந்து ஸ்கொட்லாந்து தனிநாடாகப் பிரிந்து செல்ல வேண்டும் என்பதற்கான தனது முயற்சி தோல்வி அடைந்துள்ளதை ஸ்கொட்லாந்து முதலமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன், ஸ்கொட்லாந்தின் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்த சுமார் 16 இலட்சம் வாக்காளர்களும் எதிர்காலத்தில் ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்திற்கான வலுவான அடித்தளமாக அமைவார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, ஸ்கொட்லாந்து மக்கள் பிரிவினைக்கு எதிராக வாக்களித்தால் ஸ்கொட்லாந்துக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவோம் என்று வாக்குறுதியளித்த பிரித்தானியாவின் மூன்று முக்கிய அரசியல் கட்சிகளும் தங்களின் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளாத போதும், பொறாமைப் படும் போதும் மனிதன் மற்றவனை முட்டா ளாகக் கருதி விடுகிறான். -சாக்ரடீஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மொட்டை அடித்தலின் நோக்கம் அறிவீரோ!

குடும்பி இல்லாதவர் கோபுரவாசல் தாண்டக் கூடாது என்றொரு பழமொழி தம் தமிழ் மொழியில் உண்டு. தமிழர் பண்பாட்டில் ஆண்களும் குடும்பி கட்டும் மரபு ஆரம்ப காலங்களில் இருந்து வந்துள்ளது.

குடும்பி இல்லாதவர்களை மொட்டையர்கள் என்று கூறுவர்.

இங்கு மொட்டை என்பது குடும்பி இல்லாத-தலைமயிர் உள்ளவரைக் குறிப்பதாகும். எனினும் காலப்போக்கில் ஆண்கள் குடும்பி கட்டும் மரபு இல்லாதொழிந்து போயிற்று.

இருப்பினும் வேதம் ஓதும் வேதியர்கள், மருத்துவம் செய்யும் சித்த வைத்தியர்கள், தவசிகள், முனிவர்கள், துறவிகள் என்போர் குடும்பி கட்டும் வழமையை கொண்டிருந்தனர்.

எதுவாயினும் சைவத்தமிழ்ப் பண்பாட்டில் ஆண்கள் குடும்பி கட்டுவதென்பது கட்டாயமான சம்பிரதாயமாக கருதப்பட்டது. குடும்பி வளர்ப்பது ஆண்களின் ஆயுளை அதிகரிக்கும் என்ற ஐதிகங்களும் ஒரு காலத்தில் இருந்துள்ளன.

இதை நாம் சொன்னால் சிகை அலங்கரிப்பு அமைப்புகள் நம்மீது வழக்கு தொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதை நாம் இங்கு கூறும்போது இந்தியாவில் இருக்கக் கூடிய சீக்கியர்களின் முடி வளர்ப்பும் குடும்பி கட்டுதலும் தலைப்பாகை சூடுதலும் எங்கள் பண்பாட்டில் இருந்தவை என்பதும் அந்தப் பண்பாட்டை அவர்கள் முழுமையாக கடைப்பிடிக்கிறார்கள் என்பதும் கண்கூடு.

ஆண்கள் குடும்பி கட்டும் முறைமை எங்களிடம் வழக்கொழிந்து போனதாயினும் இப்போது இருக்கக் கூடிய இளைஞர்கள் காதில் தோடு அணிந்து எங்கள் ஆதிகால கோலத்தை காட்டி நிற்கின்றனர்.

இன்னும் சில இளைஞர்கள் ஆதிகால தோற்றத்தை அரைநாண் கயிற்றிலும் காட்டிக் கொள்கின்றனர். இவை ஒரு புறம் இருக்க மொட்டை அடித்தல் விவகாரத்திற்கு மீளவும் வருவோம்.

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள கிராமம் ஒன்றில் நடந்த சம்பவம் இது. அந்தக் கிராமத்தில் அனுமர் கோவிலில் வாழ்ந்த குரங்கொன்று குளத்தில் வீழ்ந்து இறந்து போனது.

குரங்கின் இறப்பால் ஏற்பட்ட கவலை காரணமாகவும் குரங்கின் மரணம் அந்தக் கிராமத்திற்கு தோஷத்தை ஏற்படுத்தும் என்பதன் காரணமாகவும் தோஷ நிவர்த்தியாக 200 ஆண்கள் மொட்டை அடித்துக் கொண்டனர்.

மொட்டை அடித்தல் என்பது துன்பத்தை வெளிப்படுத்துவதற்காக மட்டுமன்றி தோஷ நிவர்த்திக்காகவும் செய்யப்படுவதென்பது இப்போது ஏற்புடையதாகிறது.

ஒருவர் மொட்டை அடித்துள்ளார் என்றால் ஒன்று, தனக்கு ஏற்பட்ட இழப்பின் துயரை வெளிப்படுத்துவதற்கானது அல்லது தான் செய்து கொண்ட நேர்த்திக் கடனைத் தீர்ப்பதற்கானது. இதையே தோஷ நிவர்த்தி என்று கூறிக் கொள்ளலாம்.

இது மொட்டை அடித்தல் தொடர்பில் நாம் ஊகிக்கக்கூடிய விடயம்.

ஆனால் சில நாடுகளில் சிலர் மொட்டை அடித்தால் அது அந்த நாட்டிற்கு தோஷமாகி விடுகின்றன.

இத்தகைய மொட்டைகள் மற்றவர்களை துன்பப்படுத்தும் என்ற நிதர்சனங்களையும் உணர்ந்து கொள்வது அவசியம்.

## கிளிநொச்சியில் வீடுகள் அமைக்கும் பணி மூன்றிலிரண்டு பகுதி பூர்த்தியானது

(குருமன்காடு)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறியவர்களுக்கான வீட்டுத் திட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கு பூர்த்தியாகிவிட்டதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் ஐக்கிய நாடுகள் வாழ்வக ஸ்தாபனம் ஒழுங்கமைத்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 2009 நவம்பர் 9 ஆம் திகதிக்கு பின்னர் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. மக்களை மீளவும் இயங்கு நிலைக்கு கொண்டு வரும் முகமாக அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

மக்களினுடைய பல்வேறு பட்ட தேவைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. அவர்களுக்கான நிவாரணம், தற்காலிக வீடுகள் என்பனவும் ஆரம்பத்தில் வழங்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, ஜனாதிபதி செயலணி ஆகியவற்றினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின அடிப்படையில் அரச, அரசசார் பற்ற மற்றும் ஐ.நாவின் நிறுவனங் களும் சில நாடுகளும் வீட்டுத் திட்டங்களுக்கு உதவ முன்வந்தன.

இதனடிப்படையில் 2009 ஆம் ஆண்டு நாம் மேற்கொண்ட மதீப்பீட்டின் படி 33 ஆயிரத்து 79 வீடுகள் தேவையாக இருந்தன. அதில் பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் 14 ஆயிரம் 171 வீடுகள் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக 2 ஆயிரத்து 465 வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தற்போது 16 ஆயிரத்திற்கும் குறையாத வீடுகள் முடிவடைகின்றன. இதனால் எமது மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு வீட்டுத் திட்ட தேவைகள் பூர்த்தியாகிவிட்டன. இன்னும் மூன்றில் ஒரு பகுதியினருக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்க வேண்டியுள்ளது.

தற்போது மீண்டும் ஒரு மதிப்பீடு செய்யவுள்ளோம். இதனடிப்படையிலும் மேலும் சிலருக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கவேண்டி வரும். அதனையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெப் திட்டம், ஐரோப்பிய ஒன்றியம், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, மீள்குடியேற்ற அமைச்சு, இந்திய மாதிரி வீட்டுத் திட்டம், நோர்வே அரசாங்கம், சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவை சங்கம், இந்திய வீட்டுத்திட்டம் ஆகியவற்றின் உதவியுடனே மேற்படி வீடுகள் அமைத்தல் மற்றும் அமைக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் வாழ்வக நிறுவனத்தின் அதிகாரிகள் கருத்து கூறுகையில்,

ஒப்பந்தங்கள் மூலம் எமது நிறுவனத்தால் வடக்கு கிழக்கில் 32 ஆயிரம் வீடுகள் அடுத்தவருடம் (2015) டிசெம்பர் மாதத்திற்குள் அமைத்து கொடுக்கப் படும்.

இந்நிறுவனத்தால், அவுஸ்திரேலிய அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் இவ்வாறு அமைத்துக்கொடுக்கப்படுகின்றன.

அந்தவகையில் தற்போது 18 ஆயிரம் வீடுகள் இதுவரையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், 10 ஆயிரம் வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்கள்.

அத்துடன், மேலும் 4 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தனர். (2-250)

## டிப்பர்-பேருந்து விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகனமும் பயணிகள் பேருந்தும் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அரு காமையில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்பிவிட்டு பின்பக்கமாகச் செல்லும் போது யாழ். கச்சேரி பயணிகள் பேருந்து மோதியதாலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

இதில் காயமடைந்த சாரதி உட்பட இருவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளினை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## கஞ்சா வைத்திருந்த நபர் பொலிஸாரால் கைதானார்

(கொழும்பு)

60 கிராம் கஞ்சாவை கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு கொண்டு வந்தவர் ஈரப்பெரியகுளம், நாவகம பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கஞ்சா வைத்திருந்த இருவர் ஈரப்பெரியகுளம் பொலிஸாரால் அப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

## ஈஷாவாஸ்ய உபநிடத விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகளால் நடத்தப்படும் உபநிடத விளக்கவுரை வகுப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஈஷாவாஸ்ய உபநிடத விளக்கவுரை ஆரம்பமாகவுள்ளது.

இவ் வகுப்பு காலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெறும்.

இதனைத்தொடர்ந்து ஸ்ரீமத் பகவத் கீதை விளக்கவுரை வகுப்பு வழமை போன்று 8.00 மணிமுதல் 9.00 மணி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 021222 3447 எனும் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியிலுள்ள சத்தியசாயிசேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வில் பங்கெடுத்து உயிர் காக்கும் உன்னத பணியில் பங்கு கொள்ளுமாறு வட பிராந்திய சத்தியசாயி நிறுவனத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நான் உங்களுக்கு விடுக்கும் செய்தி வெற்றியை வழிபடுங்கள், வெற்றி பெறுங்கள் என்பதே. பகவான் பகவத் தர்மாவில் இளைஞர்களின் பங்கு ஒரு நாட்டின் எதிர்கால நம்பிக்கையே. அதன் இளைஞர்களிடம் உள்ளது. மனித சரித்திரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எந்த வகையானாலும் சரி, இளைஞர்களால் தான் கொண்டு வரப்பட்டன. கன்பூஷியூஸ் சீன நாட்டிலம் சாக்ரடீஸ் கிரிஸ் நாட்டிலும் காந்தி இந்தியாவிலும் இளைஞர்களின் உதவியால்தான் மாற்றங்களை ஏற்படுத்தினர். ஆகையால் இந்நாட்டின் எதிர்காலம் இளைஞர்களாகிய உங்கள் கையில் தான் உள்ளது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தைரியமாக இருங்கள்



- வெற்றி தோல்வி குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டாம். முழுமையான தியாக உணர்வுடன் சேவையில் ஈடுபடு.
- நல்லவன் என்பவன் மற்றவர்களின் நன்மைக்காகவே தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறான்.
- இன்று முதல் அச்சம் அற்றவனாக இரு. அச்சத்திற்கு அப்பால் செல்ல முயற்சி செய்.
- சுயநலம், சுயநலமின்மை என்பதைத் தவிர கடவுளுக்கும், சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் கிடையாது.
- தைரியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உலகத்தில் இருக்கும் அச்சம் என்ற ஒன்றை விரட்டியடியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண வருடாந்த வி.விழா முல்லையில் இன்று ஆரம்பம்

வடக்கு மாகாண வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

முதல் நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமாகின்றது. வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் இப்போட்டி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டத்தினை சேர்ந்த பல வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆரம்ப நாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவும் இறுதிநாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணிக்கும் வடமாகாண உதை பந்தாட்ட அணிக்குமான சிநேக பூர்வ உதைபந்தாட்ட போட்டியும் நடைபெறவுள்ளது. (க)

# வலி.வடக்கின் சமர் ஞானவைரவர் வெற்றி

வலி.வடக்கு சமர் மென்பந்து கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்றில் அளவெட்டி ஞானவைரவர் அணி அபார வெற்றி பெற்றுள்ளது. அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் இப் போட்டித் தொடர் அண்மையில் நடைபெற்றது.

அளவெட்டி மத்திய அணியும் அளவெட்டி ஞானவைரவர் அணியும் மோதிக் கொண்டன. முதலில் ஆடிய அளவெட்டி மத்திய அணி 13:3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் கபிலன் 3 ஓட்டங்களையும் பந்துவீச்சில் பிரணவன் 6 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் அணி 8 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டினை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. துடுப்பாட்டத்தில் வலிங்டன் 17 ஓட்டங்களையும் பந்து வீச்சில் சுதன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (க)

# பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது

நாளை ஆரம்பிக்கவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பலமான முழுமையான அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. வழமையான அணியுடன் தற்காலிக தடைக்கு உள்ளாகியிருந்த ஷகிப் அல் ஹசன், அணியில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். அதேவேளை ரூபெல்/ஹசைன் உம் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். பந்துவீச்சு விதிமுறைகளை தாண்டி உள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சொஹாக் காசி, அல் அமின் ஹொசைன் ஆகியோர் அணியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். இலங்கை அணி இந்த தொடருக்கு இரண்டாம் தர அணியை தெரிவு செய்துள்ள அதேவேளை, இந்தியா இந்த தொடரில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தொடரில் இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான், சீனா, ஹொங் கொங், குவைத், மலேசியா, மாலைதீவு, தென் கொரியா அணிகள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிங்ஸ் லெவன் வெற்றி; திசர பெரேரா நாயகன்

ஹோபார்ட் கியுரிகன்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கிடையில் நடைபெற்ற சம்பியன் லீக் தொடரின் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 5 விக்கெட்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் ஹோபார்ட் கியுரிகன்ஸ் அணி முதலில் துடுப்பாடி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ட்ரவிஸ் பேர்ட், ஜொனதன் வெல்ஸ் ஆகியோர் தலா 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

திசர பெரேரா பந்துவீச்சில் 3 விக்கெட்களைக் கைப்பற்றிக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 17.4 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து வெற்றியைப் பெற்றுக் கொண்டது. கிளன் மக்ஸ்வெல் 43 ஓட்டங்களையும், திசர பெரேரா ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர். டக் பொலிஞ்சர் பந்துவீச்சில் 2 விக்கெட்க்ளைக் கைப்பற்றிக் கொண்டார்.

போட்டியின் நாயகனாக திசர பெரேரா தெரிவு செய்யப்பட்டார். (க)

# இருபது-20 கிரிக்கெட் போட்டி

நெல்லியடி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் இருபது-20 கிரிக்கெட்போட்டி நடத்தவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மைக்கல் கழக மைதானத்தில் இப் போட்டி ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் உடனடியாக தொடர்புகளை மேற்கொள்ளுமாறு மைக்கல் விளையாட்டுக்கழக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# மாட்டு வண்டி சவாரி



எழுது மட்டுவாழ் சவாரித்திடலில் நாளை 21 ஆம் திகதி ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு மாபெரும் மாட்டு வண்டிச்சவாரி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 23 ஆவது படைப்பிரிவின் லெப்ரினன் கேணல் ஏ.எவ். அமுனுகம பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.


வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-29)

# மேக்ஸ்வெல்-பெரராவுக்கு கப்டன் பெய்லி பாராட்டு

சம்பியன்ஸ் 'லீக்' கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஹோபர்ட் ஹரிகேன்ஸ் (அவுஸ்திரேலியா) அணிகள் மோதின.

முதலில் விளையாடிய ஹோபர்ட் அணி 6 விக்கெட்டுக்கு 144 ஓட்டங்கள் எடுத்தது. 145 ஓட்டங்கள் இலக்கை நோககி விளையாடிய பஞ்சாப் ஒரு கட்ட த்தில் 4 விக்கெட்டுக்கு 51 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

அதன்பின் மேக்ஸ்வெல் (43 ரன்) அதிரடி காட்டினார். அவர் அவுட்டுக்கு பிறகு திசர பெரரா அணியை வெற்றிக்கு அழைத்து சென்றார். அவர் 20 பந்தில் 35ஓட்டங் கள் (4 பவுண்டரி, ஒரு சிக்சர்) எடுத்தார்.



பஞ்சாப் அணி 17.4 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 146 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

வெற்றி குறித்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி கப்டன் பெய்லி கூறியதாவது, மேக்ஸ்வெல், திசரா பெரரா ஆகியோரின் ஆட்டம் அற்புதமாக இருந்தது. இதுபோன்ற ஆட்டம் ஒரு அணி இக்கட்டான சூழலில் இருந்து மீண்டுவர உதவும்.

ஹோபர்ட் அணி சிறந்த அணியாகும். அவர்கள் தோற்றாலும் கடும் சவாலாக இருந்தனர். அனுரீத்சிங் காயம் காரணமாக ஐ.பி.எல். போட்டியில் விளையாடவில்லை. இந்த போட்டியில் அவரது பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. நாங்கள் எங்களது திறமையான பட்டிங்கை வெளிப்படுத்தவில்லை. வரும் ஆட்டங்களில் அதை காட்டுவோம் என்றார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற பெரரா கூறுகையில், பஞ்சாப் அணிக்கு திரும்பி இருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. சர்வதேச போட்டிகளில் இருந்ததால் விளையாட முடியாமல் போய்விட்டது. ஒவ்வொருவரும் என்னிடம் பந்துவீச்சு மற்றும் பட்டிங்கில் சிறந்த ஆட்டத்தை எதிர்பார்க்கிறார்கள் என்றார். (க)

# பிராட்மேன் சாதனையை தகர்த்தார் சந்தர்போல்

வங்கதேசத்திற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சதம் விளாசிய மேற்கிந்திய தீவுகள் அணியின் சந்தர்போல் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட்மேனின் சத சாதனையை முறியடித்துள்ளார்.

செயின்ட் லூசியாவில் நடந்த வங்கதேசத்திற்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 296 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இதில் 219 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடிய மேற்கிந்திய அணி 4 ஆவது நாள் ஆட்டம் தொடங்கிய ஒரு மணி நேரத்தில்




4 விக்கெட்டுக்கு 269 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது.

அப்போது தனது 30 ஆவது டெஸ்ட் சதத்தை எட்டிய 40 வயதான சந்தர்போல் 101 ஓட்டங்களுடன் (134 பந்து, 8 பவுண்டரி) களத்தில் இருந்தார்.

இந்த சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட்மேனின் 29 சத சாதனையை முந்திய சநதர்போல், ஒட்டுமொத்தமாக அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் மேத்யூ ஹைடனுடன் 10வது இடத்தை பகிர்ந்து கொண்டார்.

பின்னர் 489 ஓட்டங்கள் இலக்கை நோக்கி 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய வங்கதேச அணி [illegible] ஓட்டங்களில் சுருண்டது. (க)



தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் 19 வயதின் கீழ் பெண்களுக்கான 63 கிலோகிராம் நிறைப் பிரிவில் யா/ சிதம்பரக் கல்லூரி மாணவி செல்வி இராமகிருஷ்ணன் தசாந்தினி 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# பிரிவினைக்கோஷம் பொருந்துமா?

## டக்ளஸ் கருத்து

நாட்டுக்கு நாடு பிரச்சினைகள் வேறுபட்டிருக்கின்ற போதிலும், தற்போதைய நிலையில் பிரிவினைக்கான கோஷம் ஒன்று தொடர்பில் இலங்கையில் கருத்துக் கோரப்பட்டால் மக்கள் அதனை நிராகரித்து விடுவார்கள் என்றே தான் நம்புவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

ஸ்கொட்லாந்தில் ஒரு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடந்து முடிந்திருக்கும் நிலையில், அது போன்ற ஒரு ஏற்பாடு இலங்கை தமிழர் பிரச்சினைக்கும் பொருந்துமா என்று கேட்டதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறினார்.

ஸ்கொட்லாந்தில் காலம்காலமாக அங்குள்ள மக்களுக்கு படிப்படியாக அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டு, அதன் இறுதியிலே யே இப்படியான ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர், ஆனால் இலங்கையில் இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கக் கூடிய இலங்கை - இந்திய ஒப்பந்தம் போன்ற வாய்ப்புக்களை இலங்கை தமிழ் தலைவர்கள தவறவிட்டுவிட்டதாகவும் கூறினார். (செ-11)

# அதிகாரங்களை பகிர்ந்து கொண்டால் பிரிவினையை தடுக்கலாம்-சம்பந்தன்

(கொழும்பு)

தமது அரசியல் தலைவிதி என்ன என்பது குறித்த முடிவை ஸ்கொட்லாந்து மக்களே எடுக்கும் வகையில் நடத்தப்பட்ட மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை ஒரு சிறந்த ஜனநாயக நடவடிக்கை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வரவேற்றிருக்கிறார்.

அதேவேளை, ஸ்கொட்லாந்து மக்கள் எடுத்த முடிவு எதுவாக இருந்த போதிலும் ஐக்கிய ராச்சியத்தின் முக்கிய கட்சிகள் அனைத்தினதும் தலைவர்களும், ஸ்கொட்லாந்துக்கு இன்னமும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கூறியிருப்பதையும் அவர் வரவேற்றிருக்கிறார்.

ஆகவே ஒரு தனியான வாழ்விடத்தில் உள்ள, தனியான இன மக்களுக்கு உரிய அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவதன் மூலம் பிரிவினையை தடுத்துக் கொள்ள முடியும் என்பது இலங்கை உட்பட பல நாடுகளின் தலைவர்களுக்கு ஒரு பாடம் என்றும் அவர் கூறினார். (செ-11)

# கோத்தா, பசிலுக்கு...

கோப்பாய்க் கோமகனின் நினைவுதினமும், தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகளுக்கான வரவேற்பு விழாவும் நேற்று மாலை நீர்வேலி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது, அங்கு உரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

போராட்டங்கள் வெற்றிக்காக மட்டும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்று எம்மக்கள் எண்ணுவதை நிறுத்த வேண்டும். போராட்டம் ஒன்று வெளிப்பார்வைக்குத் தோல்வியாகத் தென்பட்டாலும் அதன் பின்னணியில் எமக்குச் சார்பான மாற்றங்கள் ஏற்படுகின்றன-என்பதை நாம் உணர வேண்டும்.

போர் முடிந்தால் சமாதானம் ஏற்படும். தமிழ்ப் பேசும் மக்கள் இழந்த தமது உரித்துக்களைப் பெறுவார்கள் என்று காத்திருந்தது சர்வதேச உலகம். என்ன நடந்தது "எங்கடை இனத்தையே அழிக்கப் பார்ப்பினம்" என்ற அவரின் கூற்று தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உலகத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன. அபிவிருத்தி என்ற போர்வையில் அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

எனக்குக் கடிதம் ஒன்று கிடைத்தது. 13.10.2014 அன்று யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் இணைந்த விசேட மாவட்ட அபிவிருத்திக்கூட்டம் ஜனாதிபதி அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளதென்றும் அதற்கான பூர்வாங்கக் கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் என்றும் என்னை அதற்கு வருமாறும் அரசாங்க அதிபரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி திடீரென்று அப்படியானதொரு அபிவிருத்திக் கூட்டத்திற்கு முடிவெடுத்ததன் காரணம் என்ன? எமக்கு இரண்டு நாள் அவகாசத்தில் பூர்வாங்கக் கூட்டத்தைக் கூட எத்தனிப்பதன் உள்ளர்த்தம் என்ன? இவ்வாறான கூட்டங்கள் முன்னர் நடைபெற்றிருந்தால் நடைபெற்றுள்ளதாகக் கேள்வி வட மாகாண சபை வந்ததன் பின்னர் இச் சபையுடன் கலந்தாலோசித்தல்லவா வட மாகாண அபிவிருத்திக் கூட்டம் நடைபெற வேண்டும்? அவரின் கட்சியை எம் மக்கள் நிராகரித்து விட்டார்கள். அப்படி இருக்கையில் தான்தோன்றித்தனமாக அபிவிருத்திக் கூட்டம் ஒன்றினைத் தன் தலைமையின் கீழ் ஆயத்தம் செய்து வருவது எதற்காக? தாம் நடத்தும் கூட்டத்திற்கு எம்மைப் பார்வையாளர்களாக அழைப்பதின் மர்மம் என்ன? எந்த மொழியில் நடவடிக்கைகளை நடத்த இருக்கின்றார் ஜனாதிபதி? தான் கற்றிருக்கும் தவழ்த் தமிழிலா அல்லது தன் தாய் மொழியிலா? பல கேள்விகள் பதில் இல்லாமல் இருக்கின்றன. எனினும் நான் என் செயலாளரை இன்று கூட்டத்திற்குச் சென்று வருமாறு கோரியிருந்தேன்.

எமது மாகாண சபை தனித் தனியாக அல்லது சிறு மக்கட் கூட்டங்களுக்குப் பல நன்மைகள் செய்து வருகின்றோம். அரச அடிவருடிகளால் சில சமயங்களில் செய்ய முடியாத பலதையும் நாம் பெற்றுக் கொடுத்து வருகின்றோம். இது எமக்கிருக்கும் அதிகாரத்தின் நிமித்தமே என்பதை எம்மக்கள் மறக்கக் கூடாது. ஆனால் எமக்கிருக்கும் அதிகாரங்கள் மிகச் சொற்பமே, அவற்றையும் கட்டுப்படுத்த அவர்கள் பார்க்கின்றார்கள் என்பதை நாங்கள் மறக்காமல்த்தான் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம்.

இங்கு திரு.வன்னியசிங்கம் வலியுறுத்திய மற்றொன்றை மறவாது நான் மக்களுக்கெடுத்துரைக்க வேண்டும். அதுதான் தமிழ் மக்களின் ஒற்றுமை. இது பற்றி அவர் கூறிய ஒரு வாசகத்தை உங்களுடன் இத் தருணத்தில் பகிர்ந்து கொள்கின்றேன். 17.04.1956 அன்று திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாட்டில் ஆற்றிய தலைமைப் பேருரையில்- (அவர் கூறியதைக் கூறுகின்றேன்) -

"தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்றுபட்டால் தான் அவர்களுக்கு விமோசனம் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. ஓர் இலட்சியத்தை நாம் அடைய வேண்டும் என்னும் குறிக்கோளை வைத்தே இந்த ஒற்றுமை ஏற்பட வேண்டும். பலர் ஒரு கப்பலில் ஏறிக் கொள்ளலாம். எல்லோரும் கப்பலில் இருக்கின்றார்கள் என்ற அளவில் ஒருவித ஒற்றுமை இருக்கின்றது என்று கூறலாமா? கப்பலில் இருக்கும் மக்கள் கப்பலை வெவ்வேறு திக்குகளில் ஓட்ட முயற்சிக்க, வேறு சிலர் கப்பலில் துவாரங்கள் செய்ய ஆரம்பித்தால் கப்பலின் கதி என்னவாகும்? எல்லோரும் ஒரு துறைமுகத்தை நோக்கிக் கப்பலை ஓட்டுவதென்றும் அதுவரை கப்பலுக்கு வரும் இடையூறுகளில் இருந்து கப்பலைக் காப்பாற்றுவது என்றும் திடவுறுதியுடன் உழைத்தால் கப்பல் பாதுகாப்பாகத் துறைமுகஞ் சேரும்.

இன்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. அதாவது தமிழர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் நிலம் வாங்கலாம், குடியிருக்கலாம் ஆனால் சிங்களவர் வடகிழக்கில் குடியிருக்கக் கூடாது என்று கூறுவது என்ன நியாயம் என்று கேட்கின்றார்கள். இதைத் தமிழர்கள் சிலரும் முக்கியமாகக் கொழும்பில் வாழ் தமிழர்கள் சிலரும் கேட்கின்றார்கள். இதற்குப் பதிலை மிகச் சுருக்கமாகக் கூறுகின்றேன். வன்னியசிங்கம் அவர்கள் போராட்டம் நடத்திய காலத்தில் இருந்த இலங்கை அல்ல இன்றிருப்பது. 1958ல் தொடங்கிய பல கலவரங்களின் போது தெற்கில் வாழ்ந்து வந்த தமி[illegible]ங்கிருந்து அடித்துத் துரத்தப்பட்டு விட்டார்கள். அங்கிருந்த அவர்கள் நிலத்தை ஆக்கிரமித்து விட்டார்கள் அங்குள்ளவர்கள். இவ்வாறிருக்க இன்று இராணுவத்தை வடகிழக்கில் நிலை நிறுத்தியுள்ளார்கள். இந்தச் சூழலில்த்தான் மேற்படி கேள்வி கேட்கப்படுகிறது. அதாவது தெற்கிலிருந்து தமிழர்களை விரட்டி அடித்து விட்டோம், வடகிழக்கில் இருந்து அவர்களை விரட்டி அடிக்கச் சிங்களவர் பெருவாரியாக வந்து இங்கு குடியிருந்தால் என்ன என்று கேட்காமல் தமது கேள்வியை நியாயமான கோரிக்கைபோல் கேட்கின்றார்கள். ஆனால் இக் கேள்வியைக் கேட்போர் ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். எம்மவர்கள் தெற்கில் நிலம் வாங்கியது அவர்கள் பணத்தில். எம்மவர்கள் தெற்கில் கடைகள் திறந்தது அவர்கள் ஊதியத்தில். எமது மக்கள் கொழும்பிலும் இதர இடங்களிலும் கல்வியில் சிறந்து விளங்கியது அவர்கள் படிப்பாலும் அவர்கள் விடா முயற்சியாலும், உழைப்பாலும், கெட்டித்தனத்தாலும். எவரும் எம்மை அங்கு கொண்டு போய் நிறுத்தவில்லை. குடியிருத்தவில்லை.

வடகிழக்கில் வேற்றார் வாழ்ந்தால் என்ன என்று தெற்கிலிருந்து கேட்போர் எம்மை அரசாங்கம் காவவேண்டும், குடியிருத்த வேண்டும், இராணுவம் இரட்சிக்க வேண்டும் என்ற மனோ நிலையில் நின்று கேள்வி கேட்பவர்கள். அனுராதபுரத்துடன் சேர்ந்திருந்த மணலாற்றைச் சுற்றிய சில இடங்களை முல்லைத்தீவுடன் சட்டப்படி இணைக்காமலே வட மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியம் அங்கு கொண்டு வந்து குடியிருத்தப்பட்டிருக்கும் மக்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது. அவர்கள் தாங்களாகத் தம் பணத்தில் வந்தவர்கள் அல்ல. கொண்டுவரப்பட்டவர்கள். குடியேற்றப்பட்டவர்கள். அவர்களை எவ்வாறு தெற்கு சென்ற எமது தமிழ்ப் பேசும் மக்களுடன் ஒப்பிடலாம்?

இதைவிட, ஓரிரு தினங்களுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் என்னைத் தாக்கி ஒரு செய்தி விட்டிருக்கின்றார். எம்முடன் வட மாகாண முதலமைச்சர் முரண்படுகின்றமையினால் வடக்கிற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அரசாங்கத்தின் செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்றால் நகர சபைகள், மாகாண சபைகள் அனைத்தும் நகர அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் கூறியிருக்கின்றார். இதனையே ஓரிரு வாரங்களுக்கு முன்னர் அவரின் சகோதரர் இங்கு வந்து கூறிவிட்டுச் சென்றார். அதாவது வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்றால் நாங்கள் தனது அமைச்சுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று கூறிச் சென்றார். அவர்களிடையே போட்டி பொறாமை இருக்கின்றதோ அதை நான் அறியேன். ஆனால் நான் இருவரிடமும் கேட்கும் கேள்வி இதுதான். செயற்திட்டங்களுக்குப் பணம் அம்பாந்தோட்டையில் இருந்து வரவில்லை அல்லது அமெரிக்காவில் இருந்து சகோதரர் இருவரும் இங்கு வந்த போது எடுத்து வரவில்லை. அவை வெளிநாட்டுப் பணம். ஐக்கிய நாடுகள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகளிடம் இருந்து கடன்களைப் பெற்றுள்ளோம். பல்வேறு நாடுகளிடம் இருந்து கொடைகளையும் பெறுகின்றோம். வடகிழக்கு மாகாணங்கள் போரினால் பாதிக்கப்பட்டதை உணர்ந்து, கருத்தில் எடுத்து அவர்கள் எமக்குப் பணம் தந்துள்ளார்கள் அல்லது கடன் தந்துள்ளார்கள். அதைச் செலவு செய்வதும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதும் எம் நாட்டு நிறுவனங்களும் எமது மாகாணசபை அலுவலர்களும். இதனை இரு சகோதரர்களும் எமக்குப் பெற்றுக் கொடுக்காதிருந்தால் நாம் நேரிடையாகக் கோரியும் வெளிநாட்டார் எமக்குப் பணம் தந்திருப்பார்கள் கடன் வழங்கியிருப்பார்கள். இதில் உங்களுடன் நாங்கள் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஏன் கருதுகின்றீர்கள்? உங்களைத்தான் எங்கள் மக்கள் வேண்டாம் என்று விரட்டி விட்டார்களே.

இறுதியாக கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கம் அவர்கள் எமக்குணர்த்திச் சென்ற விடயங்களாகச் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். அதை "வன்னியனார் போராட்டங்கள் - விளைவுகள்" என்ற கண்ணோட்டக் கட்டுரையில் இருந்து எடுத்து வழங்குகின்றேன். அவர் எமக்கு இன்று அறிவுரை வழங்குவாரெனில் பின்வருவனவற்றை எமக்குரைப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம் - "தமிழ்மொழியையும் தமிழர்தம் மண்ணையுங் கண்ணெனப் போற்றி வாருங்கள். காந்தியின் சாத்வீக வழியில் நின்று விடுதலைக்காகக் போராடுங்கள். போராடுந் தலைவர்கள் தியாகிகளாக, ஒழுக்கசீலர்களாக, உறவுகளை இம்மியும் வருத்தாதவர்களாக, கைசுத்தமானவர்களாக, காமம், கப்பம், களவு, கொலை, கற்பழிப்பை வெறுப்பவர்களாக, தமது சொந்த குடும்ப ஆடம்பரங்களை மறுப்பவர்களாக, கடும் உழைப்பாளிகளாக, மனிதநேயம் மிக்கவர்களாக, அறிஞர்களாக, பாராளுமன்றத்தில் பயமின்றி வித்துவத்துடன் விவாதிக்க வல்லவர்களாக, சிந்தனையாளர்களாக, சாணக்கியர்களாக இருக்க வேண்டும்".! அதுவே அவர் எம்மிடம் எதிர்பார்த்தவை! ஏற்றுக் கொள்வீர்களா எனதருமைச் சகோதர சகோதரிகளே என அவர் தெரிவித்தார். (செ-4)

# சட்டத்தரணி...

மருதனை பொலிஸாருக்கு எதிரிலேயே லக்ஷான் டயஸ் மற்றும் மஞ்சுள பத்திராஜ ஆகிய சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், அது சம்பந்தமாக பொலிஸார் இதுவரை எந்த நடவடிக்கை களை யும் எடுக்கவில்லை எனவும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் மற்றும்...

ழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடமாகாண சபையின் உறுப்பினர்களை பொலிஸார் தாக்க முற்பட்டதால் அங்கு பதற்றமான சூழலும் உருவாகியது.

யாழ்.கீரிமலை மற்றும் சேந்தான்குளப் பகுதியில் கடற்படையினருடைய தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவித்தல் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்ட பகுதிகளை சட்ட ரீதியாக சுவீகரிப்பதற்கு காணிகளை அளவிடும் பணிகள் நேற்று இடம்பெறவிருப்பதாக காணி உரிமையாளர்களுக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் எந்தவிதமான அறிவித்தல்களும் கொடுக்கப்படாமல் மாதகல் கிழக்கு மற்றும் மாதகல் கோணாவளைப் பகுதியில் உள்ள பொது மக்களுக்குச் சொந்தமான 14 பரப்புக் காணியை சுவீகரிக்கும் நோக்கில் அளவிடும் பணிகளில் நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

காணிகளை அளக்க வருகைதந்த நில அளவைத் திணைக்களத்தினருக்கு நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸ் பாதுகாப்பும், கடற்படையினருடைய பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

முதலில் மாதகல் கிழக்குப் பகுதியில் உள்ள பொது மக்களின் 10 பரப்புக் காணியினை அளவிடும் பணியில் நில அளவைத் திணைக்களத்தினர் ஈடுபட்டிருந்தனர். எனினும் அப்பகுதி கிராம சேவகர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து காணி உரிமையாளருடைய அனுமதி இல்லாமல் காணியை அளப்பதற்கு அனுமதி வழங்க முடியாது என்று காணி அளப்பதில் ஈடுபட்டிருந்த திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்திருந்த நிலையில் பொலிஸாருடைய பாதுகாப்புடனும், கடற்படையினருடைய அனுசரணையோடும் காணி அளவிடும் பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வருகைதந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சி.சிறிதரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், க.சர்வேஸ்வரன், பா.கஜதீபன் வலி.வடக்கு பிரதேச சபையின் உப தலைவர் எஸ். சஜீவன், வல்வெட்டித்துறை நகர சபையின் உப தலைவர் சதிஸ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகைதந்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்து பொலிஸாருடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தர்க்கப்பட்டுக கொண்டதாலும், காணி அளக்கும் நடவடிக்கையினை நிறுத்தாவிட்டால் தாம் திணைக்கள அதிகாரிகளை முற்றுகையிடுவோம் என்று கூறியதை அடுத்து அங்கு நடைபெற்ற காணி அளவிடும் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மாதகல் ஜே/150 கோணாவளைப் பகுதியில் உள்ள மீனவர்களுடைய ராஜராஜேஸ்வரி கடற்றொழில் சங்கத்திற்கு சொந்தமான துறையினை உள்ளடக்கிய சுமார் 4 ஏக்கருக்கும் அதிகமான காணியினை அளவிடுவதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் வருகை தந்திருந்தனர்.

அங்கும் ஒன்று கூடியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அப்பகுதி மக்களும் காணி அளவிடுவதற்கு திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படட நடவடிக்கைகளுக்கு தடையாக நின்றனர். குறிப்பாக காணியின் தூர அளவினை கணிக்கும் கருவியினை சூழ நின்று கொண்டு திணைக்கள அதிகாரிகளை கடமையில் ஈடுபடவிடாமல் அவர்கள் தடுத்திருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பொலிஸார் அரசியல்வாதிகளை சூழ்ந்து நின்றதோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கும் முயற்சித்தனர். மேலும் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளவும் பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

இருப்பினும் காணி அளவிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடமளிக்காமல் சுமார் 3 மணித்தியாலங்கள் அவ்விடத்திலேயே நில அளவைத் திணைக்களத்தினரை முற்றுகையிட்டிருந்தனர்.

இறுதியாக தமிழ்தேசியக் கூட்டமைப்பினரை அச்சுறுத்தும் விதத்தில் சூழ்ந்து நின்ற பொலிஸார் அங்கிருந்து விலகிச் சென்று அக்காணியில் அமைந்திருந்த கடற்படையினருடைய முகாமில் ஓய்வெடுத்தனர்.

இதன் பின்னர் காணி அளக்கும் நடவடிக்கையினை கைவிட்ட நில அளவைத் திணைக்களத்தினரும் அதே கடற்படை முகாமில் ஓய்வெடுத்துக் கொண்டு கடற்படையினரால் வழங்கப்பட்ட மென்பானங்களை உண்ட பின்னர் காணி அளக்கும் நடவடிக்கையினை முற்றாக நிறுத்திக் கொண்டு மீண்டும் தாம் எதிர்வரும் 25 ஆம் திகதி காணியை அளப்பதற்கு வருகை தருவோம் எனக் கூறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். (செ-4)

## கா.பொ.த...

பரீட்சையில் சித்தியடையாதவர்களே இருக்கின்றார்கள்.

இவ்வாறானவர்களே நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தீர்மானங்களை எடுக்கின்றார்கள்.

இன்று முகநூல் ஓர் முக்கியமான தொடர பாடல் சாதனமாக மாற்றமடைந்துள்ளது.

இதில் இலங்கை அரசியல்வாதிகள் தொடர்பில் வெளியாகும் கருத்துக்களே அரசியல்வாதிகளின் நிலைமை குறித்து அறிந்து கொள்ள போதுமானது.

அரசியல்வாதி என்றாலே கொள்ளை, கொலை, பாலியல் வன்முறைகளில் ஈடுபடுபவர் என்ற ஓர் பிழையான நிலைப்பாடு மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

நீலம், சிவப்பு நிற அரசாங்கங்களுக்கு பதிலாக பச்சை அரசாங்கமொன்று வந்தாலும் இந்த நிலைமையை மாற்ற முடியாது.

ஏனெனில், பச்சை அரசாங்கம் வந்தாலும மோசமான அரசியல்வாதிகள் இதில் வந்து இணைந்து கொள்வார்கள்.

கட்சி மாறும் அரசியலில் ஈடுபட்டவர்கள் வரலாற்று காலம் முதல் மிக மோசமான விளைவுகளை சந்தித்துள்ளனர்.

நாட்டின் அரசியல் பொறிமுறைமையில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார். (செ-11)

## சட்டத்தரணி...

டத்தின் ஆட்சிக்காக குரல் கொடுக்கும் சட்டத்தரணிகள் மற்றும் சிவில சமூக செயற்பாட்டாளர்களுக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல்கள் காரணமாக இலங்கை அர சாங்கத்திடம இந்தக் கோரிக்கையை விடுப்பதாக சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

குறிப்பாக நாமல் ராஜபக்ஷ மற்றும் மஞ்சுள பத்திராஜ ஆகிய சட்டத் தரணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் குறித்து உடனடியான விசாரணைகளை நடத்துமாறும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ மற்றும் மஞ்சுள பத்திராஜ ஆகியோரின் அலுவலகத்திற்கு சென்ற முகத்தை மூடிய நபர்கள், தேவையற்ற வழக்குகளில் ஆஜராக வேண்டாம் என அச்சுறுத்தியதாக சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அரசியல் ரீதியான வழக்குகளில் ஆஜராகும் மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் சட்டத்தரணிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் பாரதூரமான வகையில் அதிகரித்து வருகிறது என சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## வேலணை பிரதேச...

இலங்கை மின்சார சபையின் ஊழியர்களினால் நேற்று முன்தினம் காலை கொங்கிரீட் போடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தோண்டும் பணி நேற்றையதினம் முடியும் நிலைக்கு வந்திருந்தது.

குழி சுமார் 5 அடி ஆழத்திற்கு சென்றதும் மனித என்புக்கூடுகள் சிதைந்த நிலையிலும் நொருங்கிய நிலையிலும் துகள்களாக வெளிவரத் தொடங்கின.

இதனையடுத்து குழி தோண்டும் பணியினை இடைநிறுத்திய மின்சாரசபை ஊழியர்கள் வேலணை பிரதேசசபைக்கு இது தொடர்பில் கூறியுள்ளனர்.

இதனையடுத்து குழி தோண்ட என்புக்கூடு வெளிவந்த சம்பவம் அப்பகுதியில் விரைவாக பரவியதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸாரும், புலனாவுப்பிரிவினரும் அங்கு வருகைதந்தனர்.

உடனடியாக செயற்பட்ட பொலிஸார்அங்கு கூடி நின்றவர்களை அப்புறப்படுத்தி அதனை குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தி உள்நுழைவதற்கும் தடை விதித்தனர்.

தொடர்ந்து பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதிமன்றிற்கு அறிவிப்பு செய்யப்பட நேரில் வருகை தந்து பார்வையிட்ட பதில் நீதவான் இ.சபேசன் எலும்புக்கூடு மீட்கப்பட்ட இடங்களினை ஆய்வுக்குட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

குறித்த இடத்தில் சுமார் 50 வருடங்களிற்கு முன்னர் மயானம் இருந்ததாகவும் பின்னர் அவ்விடத்தில் இந்திய இராணுவத்தின் படை முகாம் ஒன்று இருந்ததாகவும் ஊர்காவற்றுறை பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.பெரேரா நீதவானிடம் தெரிவித்தார்.

இவ் மனித எலும்புக்கூட்டு எச்சங்களினை கொழும்பிற்கு அனுப்பி பரிசோதித்த பின்னரே யாருடையது? எதற்காலத்திற்குரியது? என அறிய முடியும் என நீதவான் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

என்புக்கூடுகளினை மீட்பதற்கு சட்ட வைத்திய அதிகாரியின் உதவி தேவை என பொலிஸாரினால் கோரப்பட்டதனை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.மயூரன் பொலிஸாரினால் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டார்.

4 கிடங்குகள் தோண்டப்பட்ட நிலையில் ஒவ்வொரு கிடங்கிற்கும் இடையே 3 அடி தூர இடைவெளி காணப்பட்டமையால் அங்கு மேலும் பல என்புஎச்சங்கள் வெளித் தெரியாத நிலையில் காணப்படலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம்தொடர்பில் பல்வேறு விதமான சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளதோடு, இது மக்கள் மத்தியில் பலத்த அச்சத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.(செ-4)

## இளைஞரின்...

ள்ளார்.

இதனையடுத்து, வட்டுக்கோட்டை பொலிஸார் இது தொடர்பில் இளவாலை பொலிஸாரிற்கு தெரியப்படுத்தி தேடுதல் நடவடிக்கை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை முதல் மேற்கொள்ளப்பட்டது. இருந்தும், காணாமற்போனவர் மீட்கப்படவில்லை.

இந்நிலையில் காணாமற்போனவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (செ-11)

## ஊவாவில்...

வகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு முற்பகல் வேளையில் விடுப்பு வழங்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம் மொஹமட் குறிப்பிட்டார்.

தேர்தல் வாக்களிப்பிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மொனராகலை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி அந்தோனிப்பிள்ளை பத்னிநாதன் தெரிவித்தார்.

மஹியங்கனை தேர்தல் தொகுதியில் தம்பான பகுதியிலிருந்து ஆயிரத்து 32 ஆதிவாசிகள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## 100 வயதை...

டிய 100க்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 11 வீதமானவர்கள் முதியவர்கள் எனவும் இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டில் 23 வீதமாக அதிகரிக்கும் எனவும் தேசிய முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் சுமிந்த சிங்கப்புலி தெரிவித்துள்ளார். (செ-11)


வரதம் எம் வரம்

அன்புடன் அழைக்கின்றோம்

அமரர் சின்னத்துரை வரதராஜன்

(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான், முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.)

அவர்களின் அழியாத நினைவுகளை சுமந்த நினைவுரை நிகழ்வுகள்

காலம் – 21.09.2014
ஞாயிறு காலை 10.00

இடம் – TCT மண்டபம்
நாவலர் வீதி யாழ்ப்பாணம்



நீங்கள் எமக்கு நேரில் வந்து
ஆறுதல் அளித்தீர்கள்
துயரத்தில் பங்கெடுத்தீர்கள்

நாங்கள் உங்களை நேரில்
வந்து அழைக்கவில்லை
என்பது மனம் வருந்தக் கூடியது
என்றாலும் இதனை தனிப்பட்ட
அழைப்பாக ஏற்று
தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம்
வருகை தந்து
நினைவுரை
நிகழ்விலும்
மதிய போசனத்திலும்
கலந்து
சிறப்பிக்குமாறு
அன்புடன்
அழைக்கின்றோம்

– குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

Architecural CAD Centre
Pallaly Road Kondavil East 0718617972
Personal & Group Classes [2D-Drawing & 3D-Modeling]
Diploma in Engineering Drawing & Jaffna-Vavuniya-Colombo
Civil / Mech.
Auto CAD 2014
Lecturer by Mr.K.N.Mugunthan
Cert.in 2D Drawing in Auto CAD
University Of Peratheniya
Cert.in Advance 3D Modeling in Auto CAD
University Of Moratuwa

MOBILE PHONE REPAIRING COURSE
(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)
நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்துகொண்டுபகுதிநேரமாகவருமானம்ஈட்ட வேண்டுமா?
4 days course
புதுப் பொலிவுடன் யாழ்.நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு
திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000றக்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Ganesh.K
பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
BTEC
BRITISH TECHNOLOGY
ENGLISH COLLEGE
#21, Sirampiyadi Lane, Jaffna. T:P:-021 7904468
MO:- 0777444225
(C-8541)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org